# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 08 அதிர்வு 96 ஆனி 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162









# ஆஸியில் ஆடிய கால்கள் அமெரிக்காவுக்கு...!







ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

# ஆஸியில் ஆடிய கால்கள் அமெரிக்காவுக்கு...!

# பொருளுள்ளோர் அருள்வார்களா?

**ஆஸ்திரேலியாவிலிருந்து அமெரிக்காவின் லோஸ்ஏஞ்சல்ஸில் எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள "World Of Dannce" போட்டியில் கலந்து கொள்ள தமிழ் இளையோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சிட்னியில் உள்ள Bollyfit dance studio வின் மாணவர்களே இவ்வாறு தெரிவாகியுள்ளனர். அவர்கள் அமெரிக்காவில் நடைபெறவுள்ள போட்டியில் கலந்து கொள்வதற்கான செலவின் ஒரு சிறிய பகுதியை மக்களிடம் கோரி நிற்கின்றனர். அவர்களுக்கான உதவியை வழங்குவதும் தமிழ்மக்களின் கடமையாகும்.**

**இது குறித்து Bollyfit dance இன் நிர்வாக இயக்குநரும் ஆசிரியருமான வைத்தியர் யசோதர பாரதி சிங்கராயர், எதிரொலிக்கு வழங்கிய நேர் காணல் இது.**



**- நேர்கண்டவர்: ஜே.ஜே -**

**கேள்வி: உங்களை பற்றிய அறிமுகத்துடன் இந்த நேர்காணலை தொடங்கலாம் என எண்ணுகின்றேன்.**

பதில்: எனது சொந்த இடம் யாழ்ப்பாணம். நான் சோம சுந்தரப்புலவரின் பூட்டி. நாட்டில் ஏற்பட்ட போரால் புலம் பெயர்ந்து 1984 ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்றிருந்தோம். தமிழ்நாட்டில் எனது கல்வியைத் தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைகழகத்தில் பல் மருத்துவப் படிப்பை நிறைசெய்தேன். ஊட்டியில் தனியார் பல் வைத்திய நிலையத்தை நடத்தியிருந்தேன்.

**கேள்வி: பல் மருத்துவர் எப்படி நடன ஆசியராக..?**

பதில்: நான் நான்கு வயது முதலே இணுவில் வீரமணி ஐயரின் இசை - நடன மாணவி. அதேவேளை அண்ணாமலைப் பல்கலைக்கழத்தில் கல்வி கற்றபோது பல்கலைகழத்தின் முதல்வராக சீர்காழி கோவிந்தராஜன் இருந்தார். அவரிடம் நான்சென்று நடனம் பழகவேண்டும் என்று கோரியிருந்தேன். அவர் பல்மருத்துவத்தை தொடர்ந்து கொண்டு நடனத்தை எப்போது வேண்டும் என்றாலும் பழகுங்கள் என அனு-மதி தந்தார். அவரின் அனுமதியோடு கற்றுக்கொண்டேன். அதன்பின்னர் 1998 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு வந்துவிட்டேன். ஆஸ்திரேலியா வந்த பின்னர் என்னால் மருத்துவராக நீடிக்க முடியவில்லை. சிட்னி வந்த பின்னர் ஹோம்புஸ் தமிழ்ப்பாடசாலையில் இருந்து அழைப்பு வந்தது நடனம் கற்பித்துக்கொடுப்பதற்காக: இதுவே நடனப் பயிற்றுவிப்பின் ஆரம்பம். 1998 முதல் கோவிட் காலம் வரை தமிழ்ப் பாடசாலையில் எந்தவித கட்டணமுமின்றி நடனத்தைக் கற்பித்திருக்கின்றேன். பல கலை நிகழ்ச்சிகளை இலவசமாகச் செய்திருக்கின்றேன். தாயக நிகழ்வுகளுக்கும் நடன நிகழ்வுகளை ஏற்பாடு செய்து வருகின்றோம்.

**கேள்வி: Bollyfit Dance Studio எப்போது உருவானது..?**

*பதில்: நான் படித்தது பரதம் தான்.*

1)Fusion dance என்பது இணைவு நடனம்.

2)நமது நாட்டு Classical/Semi classical /folk/ also fusion dance.இத்துடன் மேற்கத்திய நடனங்களை சேர்த்து அமைக்கப்பட்ட நடனம்.

3) contemporary dance-என்பது நிகழ்வுகளை வெளிப்படுத்தும் சமகால நடனம்.

மற்றும் HipHpo நடனம் மேற்கத்திய நடனம் ஆகியவற்றை நான் கற்பிக்கின்றேன். தற்போது நான் பணம் அறவிடுகிறேன். அந்தப் பணத்தில் அவர்களுக்கான நடன உடுப்புகளை வாங்கிக் கொடுத்துவிடுவேன்.

**கேள்வி: மாவீரர் நாள் மற்றும் தேசத்துக்கான நிகழ்வுகளிலும் உங்கள் மாணவர்களை மேடை யேற்றுகிறீர்கள் அல்லவா ?**

பதில் : மண்ணுக்கான விடயத்தில் பணம் எனக்குப் பெரிதல்ல. பணம் வாங்குவதும் இல்லை. மண்ணுக்கான விடயத்தில் யார் யார் விரும்புகிறார்களோ அனைவரும் வரலாம். இந்த மாதிரியான நிகழ்வுக்கு வரும் அதிகமான பிள்ளைகள் இங்கு பிறந்தவர்களே .அனே-கமான பிள்ளைகளுக்கு எமது மண்ணில் நடந்த கொ-டுமைகள் தெரிவதில்லை. பெரும்பாலான பெற்றோர் சொல்லிக்கொடுப்பதுமில்லை. இந் நிகழ்வுகளுக்கு வரும் அதிகமான பிள்ளைகளுக்கு ஈழத்தில் நடந்தது என்ன என்பது குறித்து தெளிவாக விளங்கப்படுத்துவேன். சில ஒளிப்பதிவுகளைக் காட்டுவேன். நடனத்தில் உணர்வு வெளிப்பட வேண்டும். இதன் மூலம் நாம் அடுத்த தலைமுறைக்கு கடத்த முடியும். என் மண்ணுக்காக என்னால் போராட முடியவில்லை: என் மண்ணுக்காக எதையும் செய்யவில்லை. நடனத்தின் மூலமாவது என் மண்ணுக்காக இதையாவது செய்ய முடியுமல்லவா. எதிர்காலத்துக்கு எமது வலியை வரலாற்றை கடத்தலாம் அல்லவா..?

**கேள்வி: Wolrd Of Dance க்கு எப்படி தெரிவானீர்கள்..?**



பதில்: போன வருடம் World of Dance சிட்னியில் நடைபெற்றது. நாங்கள் விண்ணப்பித்தோம், பங்குபற்றினோம். ஆனால் தெரிவாகவில்லை. இம்முறையும் விண்ணப்பிக்கும் போது பிள்ளைகள் வேண்டாம் என்றுதான் சொன்னார்கள். போன முறை பங்கு கொண்டவர்கள் அனைவரும் அதிதிறமைகொண்டவர்கள் , அதனால் அவர்களுக்கு இன்னொரு தோல்வியைச் சந்திக்க சக்தியில்லை. நான் சொன்னேன்" கலந்துகொள்வோம், அனுபவத்தைப் பெற்றுக்கொள்வோம்" என்று. அதன்பின்னரே சென்றோம். 9 குழுக்களுக்கிடையில் போட்டி நடைபெற்றது. இதில் நாம் தெரிவானோம் என



அமெரிக்காவிலிருந்தே பதில் அனுப்பப்பட்டிருந்தது.

நடுவர்கள் " உங்களுடைய கலாசாரத்தையும் இணைத்து இந்த நடனத்தை முன்னிலைப்படுத்தினீர்கள். அதற்கு எமது வாழ்த்துகள் " என்று தெரிவித்திருந்தனர்.

**கேள்வி: எத்தனை மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர்..? எத்தனை வயதிலிருந்து இவர்கள் உங்களிடன் நடனம் பயில்கின்றனர்..?**

பதில்: ஒன்பது மாணவர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் சிறுவயதிலிருந்தே என்னிடம் நடனம் பயில்கின்றனர்.

**கேள்வி: World of Dance போட்டியில் மற்றும் ஆடைகள் எப்படி..?**

பதில்: ஆடை விடயத்தில் எமது கலசாரத்தை கொண்டதாகவே அமையும். பாடல்கள் தெரிவில் பெரும்பாலும் தமிழுக்குத் தான் முன்னுரிமை கொடுப்பேன்.

**கேள்வி: நீங்கள் மக்களிடம் வைக்கும் கோரிக்கை என்ன..? அவர்களுக்கு என்ன சொல்லப்போகிறீர்கள்..?**

பதில்: world of dance போட்டிக்கு சின்னப் பிள்ளைகளும் கலந்து கொள்ளலாம். அடுத்த வருடம் அவர்களும் போட்டி போடுவார்கள். அமெரிக்காவில் நடக்கவிருக்கும் போட்டி என்பது ஒரு கனவு போன்றது. இந்தப் போட்டிக்கு நாம் மீண்டும் செல்வோமா என்பதும் தெரியாது. கிடைத்த இந்த வாய்ப்பை தவறவிடக் கூடாது . உலக மட்டத்தில் எமது பிள்ளைகளுக்கு கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும். எங்களுக்கு பண உதவி செய்து போட்டியில் கலந்து கொள்ள வாய்ப்பளித்தால் ஆஸ்திரேலியாவை மட்டுமல்ல நாம் தமிழர்களையும் அடையாளப்படுத்துவதாக அமையும்.

இந் நிகழ்வில் கலந்து கொள்ளும் பிள்ளைகள் பலர் தாயகத்துக்காக பல வழிகளில் உதவி செய்பவர்கள்.






எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI



# கண் துடைப்புத் தீர்ப்புகளும் பூர்வகுடிகளும்

● சியாமளா யோகேஸ்வரன்

பண்பாடும், கலாசார விழுமியங்களும் இயைந்திருக்க, இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பூர்வகுடியினரை அடக்கி, அவர்கள் வாழ்ந்த மண்ணின் உரிமையை நூற்றாண்டைத் தாண்டிக் குடியேற்றவாசிகள் அபகரித்திருந்தனர்., ஆக்கிரமிப்பாளர்கள் தமக்குச் சார்பாக இயற்றியிருந்த சட்டத்தின் உதவியை, தம் சொந்த மண்ணின் உரிமை மீட்புக்காக நாடிய பூர்விகக்குடிகளின் போராட்டத்தில் இந்த ஆண்டுதான் வெற்றிக்கான ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. சட்டத்தின் முன்னர் யாவரும் சமம் என்றும், உரிமை-களை வழங்குவதில் பூர்விகக்குடிகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது என்று அரசாங்கம் சொன்னாலும் நடைமுறை வேறுவிதமாகத் தானிருக்கின்றது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அவுஸ்ரேலியாவின் வடக்குப் பிரதேசத்தில் பூர்வீக சமூகங்கள் இழந்த நில உரிமைக்காக நூற்றுக்கணக்கான மில்லியன் டொலரை இழப்பீடாகப் பெறுவதற்கு வழிவகை செய்யும் வகையில் வரலாற்றுச் சிறப்புடைய தீர்ப்பொன்றை, உயர்நீதிமன்றமானது 2025 மார்ச் 12 ஆம் திகதி வழங்கியிருக்கின்றது. இந்த வழக்கை யுனுபிங்கு என்பவர் பொது நலவாயத்துக்கு எதிராகத் தொடுத்திருந்தார். சொந்த நில உரிமை என்பது ஒரு சொத்து உரிமையாகும் என்பதையும், அந்த உரிமையை பொதுநலவாய அரசு எடுத்துக் கொண்டால் உரிமையாளர்கள் நியாயமான இழப்பீட்டைப் பெறத் தகுதியுடையவர்களாக இருப்பார்கள் என்பதையும் வடக்குப் பிரதேசத்தில் பொது நலவாய அரசு கைப்பற்றிய சொத்துகளுக்கு எல்லாம் இந்த நியாயமான இழப்பீட்டுக் கொள்கை பொருந்தும் என்பதையும் இந்த வழக்கின் தீர்ப்பு உறுதிப்படுத்துகிறது.

பொதுநலவாய அரசு 1978 ஆம் ஆண்டு வரை அவுஸ்ரேலியாவின் வடக்குப் பிரதேசத்தை நிர்வகித்தது. அதற்கமைய, அந்தக் காலத்தில் அரசினால் வழங்கப்பட்ட சுரங்கக் குத்தகைகள் போன்ற நடவடிக்கைகள் மூலம் பூர்வீக சமூகங்களின் சொந்த நிலஉரிமை மறுக்கப்பட்டிருந்தால், அவர்களால் தற்போது இழப்பீடு கோரக் கூடியதாக இருக்கும் என்பது இந்தத்தீர்ப்பின் சிறப்பாகும்.

**வழக்கின் பின்னணி:**

1950 மற்றும் 1960 இல் பாரம்பரிய உரிமையாளர்களின் ஒப்புதலின்றி வழங்கப்பட்ட பாக்சைட் சுரங்கக் குத்தகைக்கு (டியரஒவைந) இழப்பீடு கோரி 2019 இல் மறைந்துபோன பூர்வீகத் தலைவர் யுனுபிங்கு அவர்களால் குமத்ஜ் குலத்தின் சார்பில் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது. இந்தக் குத்தகை வழங்கலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, 1963இல் பாரம்பரிய உரிமையாளர் சமூகமான யிர்க்கலா மக்களும் இரண்டு மனுக்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தனர். நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவானது, இந்த மனுக்களைப் பரிசீலனை செய்து பூர்வீக மக்களிடம் சுரங்கத் திட்டங்கள் குறித்துக் கலந்துரையாடப்படவில்லை என்பதை உறுதி செய்தது. இந்தக்குழுவானது சில புனித இடங்களைப் பாதுகாக்க பரிந்துரை செய்திருந்தாலும், சுரங்க வேலைகளைத் தொடரவும் அனுமதி அளித்தது. 1971 ஆம் ஆண்டு பூர்வகுடிமக்கள் தம் நிலமீட்புக்காக பதியப்பட்ட Milirrpum வழக்கு 1992 ஆம் ஆண்டளவிலேயே வெற்றி பெற்றாலும் பெரிதாக எந்த மாற்றமும் வந்து விடவில்லை. 1976 இல் இயற்றப்பட்ட Aboriginal Land Rights (Northern Territory) Act மூலம் அர்ன்ஹெம் நில மறுமீட்சி பகுதிகளில் பெரும்பாலான நிலங்கள் பூர்வீக மக்களுக்கு திருப்பி வழங்கப்பட்டது. ஆனால் இந்தச் சட்டம் சுரங்கத்துக்காக பிரிக்கப்பட்ட பகுதிகளை உள்ளடக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**பொது நலவாய அரசுக்கு எதிரான வாதங்கள்**

1. சொந்த நிலஉரிமை ஒரு சாதாரணசொத்து உரிமை அல்ல என்று பொது நலவாயம் வாதிட்டது. இது ஒரு மெடிகேர் போன்ற அரசு வழங்கும் நன்மையாகவே கருதப்பட வேண்டும் என்பதால் இழப்பீடு தேவையில்லை என வாதிட்டது. ஆனால் நீதிமன்றம் இதை மறுத்து சொந்த நில உரிமையானது ஆஸ்திரேலிய உருவாக்கிய சட்டமல்ல என்றும் அது நிலையான பாரம்பரிய உரிமை என்றும் கூறியிருந்தது.

2. வடக்குப் பிரதேசத்தில் பொதுநலவாயம் சொத்துகளைக் கைப்பற்றும் போது “நியாயமான இழப்பீடு” கொள்கை பொருந்தாது என்று 1969 இல் Teori Tau வழக்கில் கூறப்பட்டது. ஆனால் இந்த வழக்கை உயர் நீதிமன்றம் இப்போது தவறானது எனத் தெரிவித்திருக்கின்றது.

3. 1903இல் தெற்கு ஆஸ்திரேலிய அரசு வழங்கியிருக்கும் குத்தகையால் சொந்த நில உரிமையானது தானாகவே இல்லாமற் போய் விட்டது என்ற வாதத்தையும் இப்போது நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தற்போது வழங்கப்பட்டிருக்கும் இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பால், குமத்ஜ் குலமானது $700 மில்லியன் வரையில் இழப்பீடு பெறுவதற்கு வாய்ப்பிருக்கின்றது. இந்தத்தீர்ப்பு வெளியாகிய பின்னர்,சட்டப்போராட்டத்தை ஆரம்பித்து வைத்த தனது மறைந்த சகோதரருக்கு மரியாதை செலுத்திய டஜாவா யுனுபிங்கு, உரையாற்றிய போது ’இந்தத்தீர்ப்பானது, எங்கள் பிள்ளைகள் மற்றும் எதிர்கால சந்ததிகளுக்கான வெற்றி’ என்று குறிப்பிட்டார்.

ஆஸ்திரேலியாவில், பிரிட்டிஷ் குடியேற்றவாதிகள் முதன்முதலில் குடியேறிய போது இந்தக்கண்டத்தை ‘டெரா



நல்லியஸ்’ (terra nullius - உரிமையற்ற நிலம்) எனக் கருதியமையானது ‘காலி நிலக் கொள்கை’ எனக் கூறப்படுகின்றது சொந்த நில உரிமை நிபுணர் டோனி டென்ஹோல்டர் கூறுகையில் 1992 இல் Mabo வழக்கில் “terra nullius” (காலி நிலம்) என்ற கொள்கையை உயர் நீதிமன்றம் நிராகரித்தது என்றும் பூர்வீக சமூகங்கள் நிலத்துக்கான உரிமையை நிரூபிக்க முடிந்தால், அவர்களுக்குச் சொந்த நில உரிமை இருப்பதை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து Native Title Act சட்டமாக இயற்றப்பட்டது என்றும் கூறுகிறார். அந்தச் சட்டம் இயற்றப்பட்ட போதிலும் 1975 இல் Racial Discrimination Act இயற்றியதற்குப் பின்னரான நடவடிக்கைகளுக்கே அரசு இழப்பீடு வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஆனால் இதுவரையில் ஏற்பட்ட இழப்புகளுக்குப் பொறுப்பெறுக்க வேண்டிய கட்டாயம் கூட்டரசுக்கு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பூர்வகுடி மக்களுக்கு சாதகமாக வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பின் தொடர்ச்சியாக இழப்பீட்டுக் கோரிக்கைகள் அதிக எண்ணிக்கையில் வருவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் பொது நலவாய அரசு அதை நிர்வகிக்க ஓர் திட்டம் உருவாக்க வேண்டியிருக்கும் என்றும் கடந்த சில ஆண்டுகளாகவே நிதித்திட்டமிடலில் இவ்விடயம் ஒரு முக்கியமான பங்கினை வகிப்பதைக் காணக்கூடியதாயிருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

முக்கியமான இந்தத் தீர்ப்பை எழுதியுள்ள தலைமை நீதிபதி ஸ்டீபன் கேஜலர் மற்றும் நீதிபதிகள் ஜாக்குலின் க்லீசன், ஜெய்ன் ஜாகாட், ராபர்ட் பீச்-ஜோன்ஸ் ஆகியோர் ‘சொந்த நில உரிமை’ எனும் பதமானது பலவீனமானது என்றும் சட்டத்தின் முன் பூர்வகுடிகள் சமமாக இருப்பதை நியாயமாக உறுதிப்படுத்தவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

நீதிபதி சைமன் ஸ்டீவர்ட், சொத்து உரிமைக்கான இந்த வழக்கின் மூலம் நிலம் மற்றும் நீர் மீது பூர்வகுடிகளுக்கு இருக்கும் உரிமைகளும் உறுதி செய்யப்படுகின்றது என்று கூறியிருக்கின்றார்.

குமத்ஜ் சார்பில் வழக்கு நடத்தியவரான மூத்த வழக்குரைஞர் ஆர்தர் மோசஸ் SC, பூர்வகுடிகளின் நிலத்தைப் பறித்ததன் மூலம் அந்தமக்களின் உரிமைகளைப் பறித்ததுடன், அவர்களது வாழ்க்கைமுறையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி பெரும் மன அழுத்தத்தைக் கொடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்தத்தீர்ப்பானது பூர்வகுடியினருக்கு இனிவரும் காலங்களில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்திக் கொடுக்கும் என்ற போதிலும் நிலத்துடன் இருந்த தொடர்ச்சியான தொடர்பை நிரூபிப்பது கடினமாக இருக்கலாம். அத்துடன் சுரங்க மற்றும் இட வளர்ச்சித் திட்டங்களுடன் ஒப்பிடும் போது பூர்வகுடிகளின் நில உரிமைக்கோரிக்கையானது முக்கியத்துவம் இழந்ததாகவே கருதப்படும். அத்துடன் நிலுவையிலிருக்கும் மேலும் பல நில உரிமை கோரிக்கைகள் தீர்வடைவதற்கு இன்னமும் நிறைய ஆண்டுகள் தேவைப்படும் என்பதும் நிதர்சனமான உண்மையாகும்.

பூர்வகுடி மக்களுக்கு நிலம் என்பது வெறும் சொத்தாக மட்டுமில்லாமல் அது அவர்களின் அடையாளமாகவும் பூர்வ குடியினர் பற்றிய கனவுக் கதைகள் மற்றும் கலாசார நடைமுறைகளுக்கான மையமாகவும் இருக்கின்றது. 1788ஆம் ஆண்டு ஐரோப்பியர் குடியேற்றத்திற்கு முன்னர், பூர்வ குடியி-னர் ஆஸ்திரேலியாவின் பல பகுதிகளில் தங்கள் நிலத்துடன் ஆழமான ஆன்மீக மற்றும் கலாசார தொடர்புகளைக் கொண்டவர்களாகவே வாழ்ந்திருந்தனர். குடியேறிகளான வெள்ளையினத்தவர் ஒப்பந்தங்களோ அல்லது இழப்பீடுகளோ இல்லாமல், நிலத்தை பரந்தளவில் பறிப்பு செய்திருந்தனர். சொந்த மண்ணில் ஒரு பூங்காவைக் கூட தமக்கென உரிமை கொண்டாட முடியாதவர்களாகத் தம் உரிமைகளை நிலை நாட்டுவதற்காகத் தம் ஆயுட்காலத்தைத் தாண்டி பூர்வகுடிகளின் சந்ததியினர் காலங்காலமாகப் போராடி வருகின்றார்கள்.

தவறை ஒப்புக்கொண்டோம், பகிரங்க மன்னிப்புக் கேட்டுக் கொண்டோம் என்று அரசாங்கம் கூறினாலும் பூர்வகுடி மக்களின் வலியையும் உணர்வையும் புரிந்து கொண்டு அவர்களுக்கான நியாயத்தை வழங்கி பூர்வகுடியினரை இம்மண்ணின் மைந்தர்களாக ஏற்றுக் கொள்ளும் போதுதான் அம்மக்களுக்கான நீதி வழங்கப்பட்டதாகக் கருதப்படும். அதுவரையில் கணக்கில் எழுதப்படாத அந்தமக்களின் இழப்புகளுக்கான கண்துடைப்புத் தீர்ப்புகள் அவ்வப்போது வெளிவருவதால் எந்த மாற்றமும் வந்து விடப்போவதில்லை.

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 95 வைகாசி 2025 தொ.பே:1800 960 162

## தடம்புரண்டது தமிழ்த் தேசியம்!

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பிறகு, அம்மக்கள் இன்றளவிலும் ஆக்கிரமிப்பு – அடக்கு முறைகளுக்கு உள்ளாகியே வருகின்றனர். ஆட்சிகள் மாறினாலும் தமிழர் தாயகத்தில் அரங்கேறும் அவலக் காட்சிகள் மாறவில்லை.

நிலைமை இவ்வாறிருக்க தமிழர் தாயகத்தில் அரசியல் நடத்தும் பிரதான கட்சிகள், தமிழ்த் தேசியத்துக்காக செயற்பட்டுவந்தமை ஆறுதல் அளித்தது. அதன் மூலமாகவேனும் அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடுதலையை அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் இருந்தது.

தம்மை தமிழ்த் தேசியக் கட்சிகளென அடையாளப்படுத்திக்கொண்ட தரப்புகள், தாங்கள் கொள்கை அரசியலையே முன்னெடுத்துவருவதாக காண்பித்துக்கொண்டன. அதுமட்டுமல்ல பதவி, அதிகாரத்தைவிட கொள்கையே முக்கியமென அவ்வப்போது சூளுரைத்தும் வந்தன.

இதனால் தமிழத் தேசியம் தொடர்பான அரசியல் பயணம் தெளிவாக உள்ளது என்றே மக்களும் நம்பினார்கள். கட்சிகளுக்கு ஆணையும் வழங்கினார்கள். ஆனால் நடந்து முடிந்த உள்ளாட்சிசபைத் தேர்தலானது தமிழ்த் தேசியக் கட்சிகளின் முகத்திரையை கிழித்து தொங்கவிட்டுள்ளது எனலாம்.

அதிகாரத்துக்காக அவர்கள் 'சாக்கடை" அரசியலைக்கூட முன்னெடுக்க தயாரென்பதையே கட்சிகளின் நகர்வுகள் காண்பிக்கின்றன.

குறிப்பாக தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்து ஓரங்கட்டப்பட்டவர்தான் டக்ளஸ் தேவானந்தா. அவருக்கு துரோகி முத்திரைகூட இந்த தமிழ்த் தேசியக் கட்சிகளால் குத்தப்பட்டது. கடத்தல், கொலை மற்றும் காணாமல் ஆக்கப்படுதல் போன்ற குற்றச்சாட்டுகளும் அவர் மற்றும் அவரது அணிக்கு எதிராக உள்ளது. தமிழ்த் தேசியத்துக்கு எதிரான கட்சியே ஈபிடிபி என்ற நிலையும் உருவாக்கப்பட்டிருந்தது.

இப்படிபட்ட ஒரு கட்சியுடன் அதிகாரத்துக்காக கூட்டு சேர்வது – பேச்சு நடத்துவது – ஆதரவைக் கோருவது என்பனவெல்லாம் அரசியலில் எந்த வகையைச் சாரும்? இது ஜனநாயகமென தமிழரசுக் கட்சி விஞ்ஞான விளக்கமளிக்க முற்பட்டால், இல்லை, சாக்கடை அரசியலென இராமலிங்கம் சந்திரசேகர் முன்வைக்கும் கூற்றையும் ஏற்கத்தான் வேண்டும்.

குட்டி சபைகளிலேயே இப்படி கூட்டு சேர்பவர்கள் நாளை மத்தியில் நாமல் ராஜபக்ச, சஜித் போன்றவர்களுடன்கூட கூட்டு சேர்ந்து ஆட்சியமைக்கக்கூடும். தமிழ்த் தேசியம் தடம் புரண்டுவிட்டது என்பதற்கான சமிக்ஞையே குட்டித் தேர்தல் மூலம் வெளிப்பட்டுள்ளது.

சைக்கிள் அணி, சங்கு அணி, மான் அணி என எல்லாமே கொள்கைக்கு அப்பால் அதிகாரத்துக்கு – பதவிக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காணமுடிகின்றது. இதனை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தும் நோக்கில்கூட வடக்கில் ஆட்சியமைப்பதற்குரிய முயற்சியில் இருந்து தேசிய மக்கள் சக்தி பின்வாங்கி இருக்கக்கூடும். இதன் தாக்கம் அடுத்த மாகாண சபைத்தேர்தலில் நிச்சயம் எதிரொலிக்கும்.

# ஈரானின் பதிலடி உண்மையான உறுதிமொழி!

# இஸ்ரேலின் அதிரடி அவசரத்தில் ஆரம்பமா?

**ஈரானியத் தாக்குதலால் டெல் அவிவ் வரலாற்றில் முதன்முறையாக பெரும் அழிவைச் சந்தித்துள்ளது. பல டசின் கணக்கான கட்டடங்கள், வாகனங்கள் ஈரானிய ஏவுகணைகள் மூலம் தாக்கப்பட்டுள்ளன. முந்தைய எந்த யுத்தத்திலும் இத்தகைய தாக்கம் இல்லையென்று கூறப்படுகிறது. தற்போது மத்திய கிழக்கு சமநிலைக்கே பெரும் சவால் உருவாகியுள்ளது.**



**• ஐங்கரன் விக்கினேஸ்வரா**

ஈரான் முழுப்பலத்துடனான பதிலடியை இஸ்ரேலுக்கு வழங்குவதாக அறிவித்துள்ளது. ஈரானின் "உண்மையான உறுதிமொழி" ( Operation True Promise) நடவடிக்கை தற்போது ஆரம்பம் என ஈரான் இராணுவம் அறிவித்திருக்கிறது.

இம்முறை பதில் தாக்குதல் நடத்துவதற்கு ஈரான் அதிக காலம் எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய விமானப்படைகள் இஸ்ரேலுக்கு உதவ முடியவில்லை போலவும் தோன்றுகிறது. மேலும் பெருமளவான ஏவுகணைகளை ஒரே நேரத்தில் ஏவினால் இஸ்ரேலின் வான் எதிர்ப்புச் சுடுபலத்தை ஓரளவு மேவித் தாக்க ஈரானுக்கு முடிந்துள்ளது.

**இஸ்ரேலை தாக்கியடிக்கும் ஈரான்:**

முக்கியமான இஸ்ரேலிய (Nevatim Air Base) விமானப் படைத்தளம் மீது ஈரானின் ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நெவாட்டிம் ராணுவ விமானப் படைத்தளம் மீதான ஈரானின் ஏவுகணைத் தாக்குதலில் இஸ்ரேலிய விமானப்படையின் பலர் காயமுற்றுள்ள நிலையில் மருத்துவமனைகளுக்கு எடுத்து செல்லப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

இஸ்ரேலில் இழப்புக்கள் தொடர்ந்து ஏற்பட்டால் எதிர்வரும் நாட்களில் ஈரான் மீதான தாக்குதல் தீவிரப்படலாம் என்று அஞ்சப்படுகிறது. இஸ்ரேலிய ' சனல் -13' வெளியிட்ட தகவலின்படி,ஈரானிய தாக்குதலால் டெல் அவிவ் வரலாற்றில் முதன்முறையாக பெரும் அழிவை சந்தித்து உள்ளது. பல டசின் கணக்கான கட்டடங்கள், வாகனங்கள் ஈரானிய ஏவுகணைகள் மூலம் தாக்கப்பட்டுள்ளன. இது போன்று முந்தைய எந்த யுத்தத்திலும் இத்தகைய தாக்கம் இல்லையென்று கூறப்படுகிறது. மத்திய கிழக்கு இராணுவ சமநிலைக்கே பெரும் சவால் உருவாகியுள்ளது.


தற்போது ஈரான் முழுப்பலத்துடனான பதிலடியை வழங்குவதாக அறிவித்துள்ளது. ஈரானின் "உண்மையான உறுதிமொழி" நடவடிக்கையின் மூன்றாம் கட்டம் ஆரம்பம் என ஈரானின் இராணுவம் அறிவித்திருக்கிறது. ஈரானிய ஏவுகணைகள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதால், இஸ்ரேல் முழுவதும் சைரன்கள் தொடர்ந்து ஒலித்தவண்ணம் உள்ளன. (07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# ஈரானின் பதிலடி உண்மையான உறுதிமொழி!

# இஸ்ரேலின் அதிரடி அவசரத்தில் ஆரம்பமா?

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இஸ்ரேலியத் தொலைக்காட்சி நிலையங்கள் ஏவுகணைத் தாக்குதலுக்குப் பிறகு தலைநகர் டெல் அவிவில் புகை மூட்டங்கள் எழுவதைக் காட்டியுள்ளன. ஆனால் உயிரிழப்புகள் குறித்து உடனடித் தகவல்கள் எதுவும் இல்லை. பல நகரங்களில் ஈரானிய ஏவுகணைகள் ஏவப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் கூறியுள்ளது. மேலும் நாடு முழுவதும் உள்ள மக்களை பாதுகாப்பான முகாம்களுக்குச் செல்லுமாறும் இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி




கொமெனி, இஸ்ரேலியத் தாக்குதல்களுக்கு பழிவாங்குவதாக சபதம் செய்துள்ளார். ஈரானிய ஏவுகணைகளால் முழு இஸ்ரேலும் தாக்குதலுக்கு உள்ளாகும் என்று கூறியுள்ளார். தற்போது பதிலடி கொடுக்க ஈரான் தொடங்கிவிட்டது என்றும் ஈரான் அறிவித்திருக்கிறது.

**ஈரான் எப்போதுமே ஆபத்தில் :**

1979 இஸ்லாமியப் புரட்சி நடத்தி மேற்கத்திய ஏகாதிபத்திய சக்திகளை வெளியேற்றியதன் விளைவாக ஈரான் எப்போதுமே தாக்கப்படக் கூடிய ஆபத்திலேயே இருந்தது. அது இப்போது நடந்து விட்டது. ஈரானால் ஒரு போதும் இஸ்ரேல் நடத்தியது போன்ற தாக்குதலை நடத்த முடியாது. அத்துடன் இஸ்ரேலியத் தளபதிகளை இலகுவாக நெருங்கவும் முடியாது.

அதனால் தான் ஈரான், ஹிஸ்புல்லா, ஹமாஸ், ஹௌதி, ஈராக் ஹிஸ்புல்லா போன்ற அமைப்புகளை ஆதரித்து இஸ்ரேல் மீது ஒரு அழுத்தத்தை ஏற்படுத்த முயற்சி செய்து செலுத்தி வந்தது. இந்த அமைப்புகள் குறிப்பாக ஹிஸ்புல்லாவின் பலம் காரணமாகவே ஈரான் மீதான தாக்குதல் தள்ளிப் போனது. ஈரானை தாக்கினால் ஹிஸ்புல்லா லெபனானில் இருந்து இஸ்ரேலைத் தாக்கும் என்ற நிலை இருந்தது. இப்போது ஹிஸ்புல்லா பலவீனம் அடைந்து விட்டது போலிருக்கிறது.

மேலும் ஈரான் மீது நெருக்குதல் செலுத்தினால் இஸ்ரேல் மீதான அழுத்தம் குறைந்துவிடும் என்று நீண்டநாட்களாக ட்ரம்ப் சொல்லியும் வந்தார். அதன் விளைவே தற்போது ஈரானை இஸ்ரேல் தாக்கி வருகிறது.

**இஸ்ரேலியத் தாக்குதலும் ஈரானின் பலவீனமும் :**

ஈரானின் முக்கியமான இடங்களில் கடந்த வெள்ளிக்கிழமை காலை நடத்தப்பட்ட பரந்துபட்ட பெரும் தாக்குதல்களில் ஈரானின் புரட்சிக் காவல் படைகளது (Revolutionary Guard) உயர் தளபதி, இரண்டாம் நிலைத் தளபதி உட்படப் பல முக்கியமான தலைமைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

தெஹ்ரானில் பல கட்டடங்கள் இடிந்து, தீப்பற்றி எரிந்துள்ளன. ஈரான் அணு ஆயுதத் திட்ட நிலையங்கள், ஏவுகணைத் தொழிற்சாலைகள் மற்றும் படைத் தலைமையகங்கள் மீது இஸ்ரேல் நடத்தியுள்ள இந்தத் தாக்குதல்களால் ஏற்பட்ட பேரழிவு ஈரானில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

இஸ்ரேலியத் தாக்குதலில் இருந்து தனது தளங்களையும் தளபதிகளையும் பாதுகாக்கத் தவறியிருப்பது ஈரானின் பெரும் பலவீனத்தை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியிருக்கிறது.

ஈரானின் தேசிய இராணுவப் பிரிவாகிய புரட்சிக் காவல் படையின் தலைமைத் தளபதி ஹொசைன் சலாமி (Hossein Salami) கொல்லப்பட்டுள்ளார் என்று இஸ்ரேலியப் பாதுகாப்புப் படை அறிவித்திருக்கிறது. தெஹ்ரான் அரசும் அதனை உறுதிசெய்துள்ளது. அதேசமயம் ஈரானிய அரச தொலைக்காட்சி வெளியிட்ட தகவலில், இஸ்ரேலியத் தாக்குதல்களில் அறிவியலாளர்கள் ஆறு பேர் உட்படப் பெண்கள், குழந்தைகளும் 78 மக்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவித்திருக்கிறது.

இத்தகைய கொடூரமான தாக்குதல் இஸ்ரேலின் நேரடியான "போர்ப் பிரகடனம்" என்று ஈரானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கிறார். பதிலடியாக நூற்றுக் கணக்கான ட்ரோன் விமானங்களால் இஸ்ரேலைத் தாக்கியிருக்கிறது தெஹ்ரான். எனினும் இஸ்ரேலிய வான் பாதுகாப்பு சாதனங்கள் அவற்றைத் தடுத்து அழித்திருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

**அமெரிக்கா தலையிடவில்லை ?**

இஸ்ரேலின் தாக்குதல்களோடு அமெரிக்கா எந்த விதத்திலும் சம்பந்தப்படவில்லை என்று அதிபர் ட்ரம்ப் கூறியிருக்கிறார். ஈரான் தன்னுடைய அணு ஆயுதத் திட்டம் தொடர்பில் அமெரிக்காவுடன் ஓர் இணக்கத்துக்கு வரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ள அவர், தவறினால் மேலும் இது போன்ற அழிவுகளைச் சந்திக்க நேரிடும் என்று எச்சரித்திருக்கிறார்.

இதற்கு முன்னராக அதிபர் ட்ரம்ப் நாட்டின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தைக் கூட்டி இஸ்ரேலியத் தாக்குதலுக்குப் பிந்திய நிலைமைகளை ஆராய்ந்தார் என வெள்ளை மாளிகை அறிவித்தது.

**கச்சா எண்ணெய் விலை உயர்வு**

இஸ்ரேலின் தாக்குதலுக்கான தனது பதிலடி எல்லை வரம்பு எதுவும் இருக்காது என ஈரான் எச்சரித்திருக்கிறது. இதனால் பிராந்தியத்தில் பெரும் போர்ப் பதற்றம் தோன்றியுள்ளது. உலக சந்தையில் எண்ணெய் விலை பத்து சதவீதத்துக்கும் மேல் உயர்ந்துள்ளது.

ஈரான் மீதான இஸ்ரேலிய தாக்குதலுக்கு பிறகு உலகளாவிய எண்ணெய் விலைகள் உயர்ந்து பங்கு சந்தைகள் சரிந்துள்ளன. இத்தாக்குதல்செய்தி வெளியான பிறகு கச்சா எண்ணெய் மற்றும் NYMEX லைட் ஸ்வீட் 8% க்கும் அதிகமாக உயர்ந்தன.

எரிசக்தி வளம் மிக்க பிராந்தியத்தில் மோதல்கள் விநியோகத்தை சீர்குலைத்து, குறைந்த எண்ணெய் கிடைக்கும் என்று வர்த்தகர்கள் கவலை கொண்டுள்ளனர். இதற்கிடையில், முதலீட்டாளர்கள் தங்கம் மற்றும் சுவிஸ் பிராங்க் போன்ற பாதுகாப்பான புகலிட சொத்துக்கள் என்று அழைக்கப்படுபவற்றுக்கு மாறியதால், வெள்ளிக்கிழமை ஆரம்பத்தில் ஆசிய வர்த்தகத்தில் பங்குகள் சரிந்தும் உள்ளதாகக் கூறப்படுகிறது.




# கேடு கெட்ட வாழ்க்கை

ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

இந்த வாரம் இரண்டு வணிகத் திரைப்படங்கள் பார்த்தேன். மலையாள நடிகர் மோகன்லால் நடித்த "துடரும்". மற்றும் ஸ்டோலன் என்றொரு ஹிந்தித் திரைப்படம். ஒரு மாபெரும் நடிகனாக மோகன்லால் காட்சிக்கு காட்சி மிளிர்கிறார். உங்களுக்கு வயதாகி விட்டது, உங்கள் களத்தில் வெளியேறும் காலம் வந்துவிட்டதா? நீங்கள் என்ன செய்யவேண்டும். பழைய பெருமைகள் பேசிக்கொண்டிராமல் உங்களின் களத்தில் வயதிற்கேற்ற வகையில் களமாடவேண்டும் . அதனை மோகன்லால் சரியாகப் பயன்படுத்திக்கொள்கிறார். மற்றோரு படமான ஸ்டோலன் படமென்பது ஒரு நல்ல சினிமா எப்படி இருக்கவேண்டும். கதாபாத்திரங்களின் மாற்றத்தை எவ்வாறு சரியாக காட்ட வேண்டும் என்பதற்கு நல்ல உதாரணம். இது என்னடா , தக் லைஃப் படம் விமர்சனம் என்று சொல்லிவிட்டு இந்த படங்களை பற்றி பேசுகிறாயே என்று நீங்கள் கேட்கலாம். முந்தைய இரண்டு படங்களும் கமல் மற்றும் மணிரத்னம் பார்க்கவேண்டும். காலம் மாறுகிறது . கொஞ்சம் புதியவர்களுக்கு வழிவிடுகிறீர்களா ?

விக்ரம்-வேதாளம் படத்தில் விஜய் சேதுபதி சொல்வது போல , நான் ஒரு கதை சொல்லட்டுமா " முன்பொரு காலத்தில் ஒரு ரவுடிக்கூட்டம் இருந்தது. அவர்களுக்கு போட்டியாக இன்னொரு ரவுடிக்கூட்டம் இருந்தது. இந்தக் கூட்டத்தில் ஒருவர் அடுத்த கூட்டத்தில் இருந்த ஒருவரை போட்டுத்தள்ளுகிறார். பதிலுக்கு அந்தக் கூட்டத்தில் ஒருவர் இந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவரை போட்டுத் தள்ளுகிறார். கடைசியில் எல்லோரும் இறந்த பிறகு ,பெரிய ரவுடி திருந்தி விவசாயம் செய்யப்போகிறார் .சுபம் " இது என்னையா கதை ? கருத்து எங்கே ,நீதி எங்கே என்று கேட்காதீர்கள் ? . நீதி நீதி என்று கத்துகிறீர்களே இது தானய்யா தக் லைஃப் ( புதுமைப்பித்தன் பாணியில் ) பழைய படங்களில் சிவாஜி இறந்த பிறகு சுபம் என்று திரையில் தோன்றும். இங்கே பார்த்துக்கொண்டிருந்த பார்வையாளர்கள் இறந்த பிறகு சுபம்.

இந்தப் படத்தின் கதைச் சுருக்கம் , மணிரத்தினம் காட்டும் உலக சினிமா , ஆயிரம் படிமம் தாங்கிய அபூர்வ சிந்தாமணி என்று உலகமெங்கும் பேசிவிட்டதால் நான் அதனைப் பற்றி பேசப்போவதில்லை. அது மட்டுமில்லாது நான் முந்தைய பத்தியில் கதைச் சுருக்கத்தை ஏற்கனவே சொல்லிவிட்டேன். மிகவும் எதிர்பார்த்த நம் ஆதர்சங்கள் ஏன் எங்களை கைவிட்டுவிட்டார்கள் என்று நெஞ்சம் பதைபதைக்கிறது. உலகத்தில் பெரிய கொடுமை என்ன தெரியுமா ? நீங்கள் நிமிர்ந்து பார்த்த ஆதர்சங்கள் தரைமட்டத்திற்கு இறங்கிவிடுவது தான், இங்கே நான் சொல்வது மணி ரத்னம் மற்றும் கமல். இவர்கள் இருவரும் இணைகிறார்கள் என்றால் நமக்கு உடனே நினைவுக்கு வருவது நாயகன் படம் அல்லவா. ஏறக்குறைய 40 வருடம் கடந்த பிறகும் ஒரு மைல்கல்லாக நிற்கிறது. தக் லைஃப் இவர்களின் மிக மோசமான படம் என்றே சொல்ல முடியும். கதை விவாதம் நடக்கும்போது இப்படித்தான் நடந்திருக்குமென்று நினைக்கிறேன் ," சார், நாயகன் மாதிரி படம் வேண்டும். ஆனால் குருதிப்புனல் போன்று இருக்கவேண்டும். ஏற்கனவே ரிச்சா விஸ்வரூபம் படம் எடுத்திருக்கிறேன். அது மாதிரியும் எடுக்க வேண்டும். அப்புறம் என்னோட விக்ரம் பெரிய ஹிட் . இப்போ எல்லாருக்கும் அந்த மாதிரி படம் தான் பிடிக்கும் , கூடவே சிம்பு, த்ரிஷா எல்லாம் இருக்கிறதனாலே கொஞ்சம் அவங்களையும் சேர்த்துக்குங்க , உங்க பழைய படம் பீலிங் வேண்டும் சார் " இதற்கு மணி - " கண்டிப்பா செய்துவிடலாம் " விளைவு நமக்கு கிடைத்தது. " தக் லைஃப் "

இந்தப் படத்தில் கமல் இருக்கிறார். கமல் மட்டுமே இருக்கிறார். இவர் வாழும் எல்லா ஊரிலும் எல்லோரையும் போட்டுத் தள்ளுகிறார். இரண்டு குண்டுகள் பாய்ந்து, இரண்டாயிரம் அடி பள்ளத்தாக்கில் விழுந்த போதிலும் உயிர் பிழைக்கிறார். குண்டு பாய்ந்த போதிலும் வேகமாக வந்து சாகசம் செய்கிறார். அது மட்டுமில்லாது அவருக்கு ஒரு புதுமையான நோய் இருக்கிறது. நமக்கு பிளட் பிரஸர் , நீரிழிவு நோய் போன்று இதுவும் தீராத வியாதி. அதற்கான மருந்தும் அவரே சொல்கிறார். இதனால் உலகத்தில் வாழும் கோடான கோடி ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி கணவர்களுக்கு நல்ல டிப்ஸ் தந்திருக்கிறார்.இந்த படத்தில் பொலிஸ் எங்கே என்றெல்லாம் கேட்டீர்களென்றால் மணிக்கு வருவது போல் எனக்கும் கோபம் வரும். அவர்கள் தலைசிறந்த மத்தியஸ்தர்களாக வருகின்றனர். படத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை யாரிடமாவது பேசிக்கொண்டு ஒப்பந்தம் செய்துகொள்கின்றனர். உங்களுக்கு புதுதில்லி ,ஜெய்சால்மர் ,கோவா, திருச்செந்தூர், மவுண்ட் கைலாஷ் இடங்களின் ரீல்ஸ் பார்க்கவேண்டுமா. இந்த படத்தை தவறவிடக் கூடாது. இந்தப்படத்தின் வில்லன்கள் மற்றும் ஹீரோக்கள் தலைக்குள்ளே எதுவும் இல்லை என்பது நமக்கு தெரியக்கூடாது என்பதற்காகவே மிகவும் நீளமாக முடி வளர்த்து விட்டிருக்கிறார் மணிரத்தினம்.

இந்தப்படத்தை பற்றிய ஒரு முகநூல் விமர்சனத்தில் இடைவேளைக்கு பிறகு நீங்கள் படத்தை பார்க்காது போனால் ரத்தம் கக்கி சாவீர்கள் என்று பயமுறுத்தியதால் பல்லை கடித்துக்கொண்டு இந்த இரண்டு மணி 40 நிமிட அவஸ்தையை பார்க்க வேண்டிய கொடுமை. இது மட்டுமில்லாது குருதிப்புனல், நாயகன் லெவல் என்று அடித்து விட்டிருந்தார்கள். பாவிகளா இதெல்லாம் நியாயமா. இந்த 2025 ஆம் ஆண்டில் கூட ஒரு பெண் கர்ப்பம் தரித்து காதலன் கைவிட்டு விட்டால் (அவன் கூட முழுபோதையில் எனக்கு அதெல்லாம் கவலை இல்லை என்று தானே சொன்னான் . கைவிட வில்லையே , ஹி ஹி ) நாசரின் மகள் மாடியில் இருந்து குதித்து இறந்துபோவாள். எந்த ஊரில் ஐயா நீங்கு இங்கு இருக்கிறீர்கள். இதில் கமல் வேறு தான் வீட்டில் இருக்கும் அத்தனை பெண்களும் வெளியில் போகும்போது ஆண் துணையில்லாமல் போகக்கூடாது என்று பேசுகிறார் ( மகளிர் சங்கங்கள் கவனிக்க வேண்டும் ) . கமலின் மேல் ஒரு சுவர் இடிந்து விழும் காட்சி இருக்கிறது. நியாயப்படி நம்மேல் விழவேண்டியது. அப்பொழுதாவது அவர் இறந்துபோய் படம் முடியுமென்று பார்த்தால் .அதில் உயிர்பெற்று சரச வசனம் பேசுகிறார். எம்.ஜி.ஆர் நடித்த கடைசிப்படங்கள் நமது கண் முன்னே வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

ஒரு கவுண்டமணி -செந்தில் காமெடி தான் ஞாபகத்திற்கு வருகிறது. சாட்டையடித்து கொண்டு பிழைப்பு நடத்தும் கவுண்டமணியை பார்த்து ,"நீங்கள் இன்னும் எவ்வளவு நாளைக்கு இந்த ஊரில் இருப்பீர்கள்" என்று ஒருவர் கேட்பார், அதற்கு கவுண்டமணி " நீங்களா எங்களை அடித்து துரத்துகிற வரைக்கும் நாங்கள் போகமாட்டோம் " என்பார் . அப்பொழுது கேள்வி கேட்டவர் செந்திலைப் பார்த்து ," அப்போ அவரு ?" என்பார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்ப்பக்கம்



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

எழுத்தாளர் சுஜாதா 1965 -1988 வரை தமிழ் மாத இதழான கணையாழியில் “கடைசிப் பக்கங்கள்” என்ற பத்தியை எழுதினார். அந்தப் பத்தியில் நாட்டுப்புறப் பாடல், சங்க இலக்கியம், ஆழ்வார் பாடல்கள், புதுக்கவிதை, ஹைக்கூ, சங்கீதம், அரசியல் சினிமா, சமகால சமுதாயம், ஆன்மிகம், இலக்கிய விமர்சனம், விஞ்ஞானக் கதை, எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் என்ற எல்லாவற்றையும் மிகச் சுருக்கமாக ஆனால் மிகத் தெளிவாக ‘நுண்ணிய நுழை-மான் புலம் தெளிவுற’ எழுதியிருப்பார். எனக்கெல்லாம் அவர் என்றும் ஆதர்சம். அவரின் வழியைப் பின்பற்றி எதிரொலியில் ஒரு பத்தி எழுதவேண்டுமென்று ஆசை. நண்பர் பிரசாந்தனும் உற்சாகப்படுத்தியதால் இந்தப் பத்தியை இந்த மாதம் முதல் எழுதத் தீர்மானம். நன்றாக இருந்தாலும் ,இல்லாவிட்டாலும் ஆசிரியருக்கு ஒரு கண்டன / ஊக்க அஞ்சலோ அனுப்பினால் நான் தன்யனாவேன்.

### அரசியல் பழகு

கடந்த தேர்தலுக்கு முன் நடிகர் கமல்ஹாசன் தனிக்கட்சி ஆரம்பித்த பொழுது, ஆச்சரியப்பட்டாலும் உள்ளுக்குள்ளே மகிழ்ந்தேன். பொதுவாழ்வில் மற்றவர்களுடன் ஒப்பிடும்போது நேர்மையான மனிதராக வாழ்ந்து வருபவர்.

பிறகு தேர்தலின் போது மக்கள் நீதி மய்யத்தின் அனைத்து வேட்பாளர்களும் படுதோல்வி அடைவார்கள் என்று எதிர்பார்த்த போதிலும், கமல் வெற்றி பெறவேண்டும் என்று எல்லோரையும் போலவே நானும் ஆசைப்பட்டேன். பல்வேறு உள்குத்துகளால் அவர் குறைந்த வாக்குகளில் தோற்றுப்போனதில் மிகுந்த வருத்தம் தான். அதன் பிறகு கமல் கட்சி நடத்துவது மிகச் சிரமம் என்பதை நேரடியாக அறிந்து கொண்டதால் ,தொடர்ச்சியாக பல்வேறு சமரசங்களைச் செய்து கொண்டு வந்து ம.நீ.ம ஒரு மறைமுக ஆளுங்கட்சி சார்புநிலைக்கு வந்து பின்பு நேரடியாக கழக அரசியலுடன் கரைந்து போனதில் வருத்தமே எஞ்சியது.

பார்த்திபன் / வடிவேலு காமெடி வருவது போல இங்கு நல்ல மீன்கள் விற்கப்படும் எவ்வாறு வெறும் பலகையில் முடிந்ததோ , அவ்வாறு மக்க ள் நீதி மையம் வெறும் அறிக்கைப் பதிவேட்டுக் கட்சியாக மாறியதில் நமக்கு மட்டுமல்ல அவருக்கும் தெளிவாகத் தெரிந்து கொண்டது என்னவென்றால் மக்களுக்கு நீதி நேர்மையாளர்களாக எல்லாம் சினிமாவில் மட்டும் தங்கள் நடிகர்கள் நடிக்கவேண்டும் என்பதே. அரசியலில் கடைந்தெடுத்த அயோக்கியர்கள் மட்டுமே அரியணை ஏற முடியுமென்பது எழுதப்படாத விதி.

தொலைக்காட்சி , ரிமோட் மட்டும் நாற்காலிகளை உடைத்ததோடு கடைசியில் கொஞ்சம் நஞ்சமிருந்த நம்பிக்கையும் உடைத்திருக்கிறார் உலக நாயகன்.

இது ஒருபுறமிருப்பினும், கமல் தவிர வேறு யாராவது ராஜ்யசபா உறுப்பினராகி என்ன சாதிக்கப்போகிறார்கள்?. நம்மவர்கள் அனைவரும் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டு , உணவகத்தில் சாப்பிடுவதோடு அவர்கள் கடமை முடிந்துவிடும். கமல் போன்று ஒரு புத்திசாலி ஹிந்தியில் அவர்களுக்கும் (?) புரியும்படி நமது குரலை ஒலிக்க வேண்டும். ஒலிப்பார் என்று நம்புகிறேன்.

### தமிழின் தொன்மை

கணினி தகவல் தொடர்பான தொழிநுட்பத்தில் ஒரு சொல்லாடல் உண்டு “Without a Data, you are just another person with the opinion. கீழடி சர்ச்சை மறுபடியும்



கிளம்பியிருக்கிறது. எல்லோரும் வரலாற்றையும், காலத்தையும் பின்னோக்கித் தள்ளப் பார்க்கிறார்கள். உலகின் முதல் குரங்கு தமிழ்க் குரங்கு என்று பஜனை பாடுவதும், “கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி” என்று ஜல்லியடிப்பதில் நமது காலத்தை தொலைத்துக்கொண்டிருக்கிறோம். எழுத்தாளர் பி.ஏ.கிருஷ்ணன் தமிழ் மொழியின் தொன்மை பற்றிய நேர்காணல் யூடியூபில் பார்க்கக் கிடைத்தது. அவர் கூறும் கருத்துக்களில் நான் 100 சதவிகிதம் ஒத்துப்போகிறேன். தமிழ் மொழியின் தொன்மையை நாம் யாவராலும் மறுக்க முடியாது. தமிழின் பெருமை என்பது அதன் கலைச்செல்வங்களிலும், இலக்கிய வளமையிலுமே இருக்கிறது. நாம் நிஜமாகவே பெருமைப்பட்டுக் கொள்ளவேண்டியது நமது இலக்கணச் செழுமையிலும் (தொல்காப்பியம், நன்னூல் போன்ற நூல்கள்), பக்தி இலக்கியத்திலும் , இரண்டாயிரம் ஆண்டு பழைமை வாய்ந்த இலக்கியத்திலும் இருக்கிறது. கம்ப ராமாயணம் போல் உலகில் உள்ள செம்மொழிகளில் காணப்படும் காவியங்களை விட எந்த விதத்திலும் குறைந்தது கிடையாது. ஒரு தமிழராக நாம் என்னசெய்யவேண்டும்? இந்த வரலாற்றினை நமது குழந்தைகளுக்கு சொல்லித்தரவேண்டுமே ஒழிய வெற்று அரசியல் கூச்சல்களும், கபடதாரிகளின் புரட்டு வரலாறுகளோ அல்ல. சுஜாதா கூறிய விஷயம் தான் ஞாபகத்திற்கு வருகிறது” மொழியை கன்னித்,தாய் என்று கொஞ்சுகிற பிசினஸ்ஸை விட்டொழித்தால் தான் நமக்கு விடிவு காலம் ”

### திடீர் மொழியியல் வல்லுநர்கள்

கடந்த மாதம் சமூக ஊடகங்களில் திடீரென திரும்பிய பக்கமெல்லாம் மொழியியல் ஆராய்ச்சி பதிவுகள் முளைத்தன. திடீர் ஆராய்ச்சியாளர்கள் கன்னட மொழி தமிழிலிருந்து தான் பிறந்தது என்று லெமூரியாக் கண்டத்தை பிளந்து ஆய்வுகளை அடுக்கிவைத்தனர். இந்த சூறாவளி நடந்துகொண்டிருக்கும் வேளையில் தான் , கன்னட எழுத்தாளர் பானு முஷ்டாக் “தனது சிறுகதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலான ஹார்ட் லேம்ப்” ( Heart Lamp) என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக புக்கர் விருதை வென்று வரலாறு படைத்துள்ளார். இந்தப் பரிசை வென்ற முதல் கன்னட நூல் இதுவாகும். 1990 முதல் 2023 வரையிலான முப்பது ஆண்டுகளில் முஷ்டாக் எழுதிய 12 சிறுகதைகளைக் கொண்ட ஹார்ட் லேம்ப், தென்னிந்தியாவில் வாழும் முஸ்லிம் பெண்களின் கஷ்டங்களை அழுத்தமாக பேசியதால் விருது பெற்றிருக்கிறது. நமது அண்டை மாநிலத்தை சேர்ந்த ஒருவர் எழுதிய நூலிற்கு புக்கர் பரிசு கிடைத்திருக்கிறது. ஏன் இங்கே தமிழில் நடக்கவில்லை? நம்மிடையே திறமை இல்லையா?அசோகமித்திரன் இதை விட காத்திரமான நூறு கதைகள் எழுதியிருக்கிறார். அவரின் காலமும் ஐந்து குழந்தைகளும், பிப்லப் சௌதுரியின் கடன், பிரயாணம். புலிக்கலைஞன், காந்தி,அப்பாவின் சிநேகிதர் போன்ற சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இங்கிலாந்திற்கு கொண்டு சென்றிருந்தால் எப்போதோ கிடைத்திருக்கும். செய்யமாட்டார்கள். ஏனென்றால் நம்மவர்களுக்கு அப்படி ஒரு வெறுப்பு. தமிழில் நோபல் போன்ற எல்லா விருதுகளுக்கும் தகுதியான கலைஞன். நாம் அவரை கைவிட்டுவிட்டோம். நமக்கெல்லாம் மேடையில் சூளுரை விடும் வெற்று அரசியல்வாதிகளின் இலக்கியம் போதும் அல்லவா.

### வாயு பகவான் அல்பானீஸ்

இந்திய அரசியல் வரலாற்றில் மிகச்சிறந்த மக்களுக்கு பயன்தரும் பல நல்ல திட்டங்கள் நிறைவேறியது மன்மோகன்சிங் தலைமையில் அமைந்த 2004-2009 வரையிலான தேசிய முன்னேற்ற கூட்டணி ஆட்சியில் தான். இடதுசாரிகள் கிடுக்கிபிடியில் நடந்த இந்த ஆட்சியில் மக்களுக்கு எதிரான எந்தத் திட்டங்களையும் நிறைவேற்ற முடியவில்லை. இதுபோன்ற ஒரு நிலைமையைத் தான் நடந்து முடிந்த ஆஸ்திரேலிய நாடாளுமன்ற தேர்தலின்போது இங்கே நான் எதிர்பார்த்தேன். ஆனால் டட்டனுக்கு எதிரான அலையில் அல்பானீஸூக்கு அடித்தது யோகம். அறுதிப்பெரும்பான்மை எப்போதுமே ஜனநாயகத்திற்கு ஆபத்து. அவர்கள் நினைத்தபடி ஆடலாம். அதற்கான அறிகுறிகள் இப்பொழுதே தெரியத் தொடங்கிவிட்டன . முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போதைய லேபர் அரசாங்கம் புதைபடிவ எரிபொருள் திட்டங்களுக்கு தொடர்ந்து ஒப்புதல் அளித்து வருகிறது. உலகின் மிகப்பெரிய திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுத் திட்டங்களில் ஒன்றான வுட்சைட் எனர்ஜியின் ஒப்பந்தத்தை 2030 முதல் 2070 வரை நீட்டிக்க சுற்றுச்சூழல் அமைச்சர் முர்ரே வாட் பச்சைக்கொடி காட்டியுள்ளார். இது ஆஸ்திரேலியாவின் சுற்றுச்சூழல் கொள்கைக்கு விழுந்த மிகப்பெரிய அடி. செனட்டிலும் லேபரின் கை ஓங்கி வருகிறது. இன்னும் என்னவெல்லாம் செய்ய காத்திருக்கிறார்களோ தெரியவில்லை. தமிழ் சினிமா நகைச்சுவை வசனம் தான் ஞாபகத்திற்கு வருகிறது,” அவன் சும்மாவே ஆடுவான். சலங்கையை கட்டிவிட்டா சும்மாவா இருப்பான்?”

### படித்ததில் பிடித்தது

எங்களுடன் அந்த பட்ச்சில் எம்.ஐ.டி-யில் படித்த மற்றவர்களுடன் ஒப்பிட்டால் கலாமின் வளர்ச்சி பன்மடங்கானது. நாங்கள் யாரும் ‘பாரத ரத்னா’ ரேஞ்சுக்கு உயரவில்லை. கலாமின் வெற்றிக்கு முக்கியமான காரணம், செய்யும் தொழில் மேல் பக்தியும் அயராத உழைப்பும் தன்னம்பிக்கையும்தான்.”
- அப்துல் கலாம் பற்றி சுஜாதா.

# Thug life-கேடு கெட்ட வாழ்க்கை

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு கவுண்டமணி,” செருப்பை கழற்றி அடித்து சாணியைக் கரைத்து தலையில் ஊற்றுகிறவரை அவனும் போகமாட்டான் ” என்று பதில் சொல்வார். புகழின் உச்சியில் இருந்த beatles குழுவினர் ஒரு நேர்காணலில் இப்படிச் சொல்லியதாக எங்கோ படித்த நினைவு” We are preparing to fall “ தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் எல்லோரும் தங்கள் புகழின் உச்சியிலிருக்கும்போது எப்பொழுது ஓய்வை அறிவிப்பது என்று திணறுவார்கள். அது போன்று கமலும், மணியும் திணறுவது நன்றாகவே நமக்கு தெரிகிறது. கமல் எனும் நடிகன் சிறப்பாகவே வெளிப்படும் தருணங்கள் சில இந்தப் படத்தில் உண்டு என்றாலும் அதற்காக நம்மை படம் முழுவது சோதிக்க வைப்பதைத்தான் தாங்க முடியவில்லை. எதாவது சோகக் காட்சிகள் வரும்பொழுதெல்லாம் “ஐயோ அஞ்சு வண்ணப் பூவே பாடல் வந்துவிடுமே ” என்று நமக்கு பயங்காட்டியிருக்கிறார்கள்.

இந்தப் படத்தில் நிறைகளே இல்லையா என்று கேட்கலாம். நிறை என்று சொல்லமுடியாது. தேவலை என்று சொல்லலாம். ஏனென்றால் நீங்கள் ஒரு உச்ச நடிகர் , உச்ச இயக்குநர் படம் என்றால் உச்சத்தில் இருக்கவேண்டும் இல்லையா. அந்த எதிர்பார்ப்பு தவிடுபொடியானதின் வேதனை தான் .வேறென்ன சொல்வது. த்ரிஷாவின் கதாபாத்திரம் ஒரு சிக்கலான பாத்திரப் படைப்பு. மிக நன்றாகவே செய்திருக்கிறார். சிம்பு மிக இயல்பாக நடித்திருக்கிறார். இந்த வேடம் அவருக்கு அல்வா சாப்பிடுவது போல.வையாபுரி ஒரு நல்ல நடிகன்.மிகச் சரியாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.நாசர் எவ்வளவு பெரிய நடிகன். ஏனைய்யா அவரை வீணடித்திருக்கிறீர்கள்?. மிகவும் எதிர்பார்த்த ரஹ்மானும் நம்மை வேதனை அடையவைத்திருக்கிறார். மொத்தத்தில் எதுவுமே பிடிக்கவில்லை. இது எனது தனிப்பட்ட கருத்து.

கமல் நடித்த பேசும்படம் என்ற சிறந்த படம் பார்த்திருக்கிறீர்களா. அதில் ஒரு காட்சி வரும். கமல் ஒரு பெட்டியில் முகஞ்சுளிக்க செய்யும்,நாற்றமடிக்கும் ஒன்றினை நன்றாக அட்டைப்பெட்டியில் அடைத்து, மினுங்க செய்யும் பளபளப்பு தாளில் சுற்றி, வாசனைத்திரவியம் எல்லாம் அடித்து, விலைமதிப்பான அன்பளிப்பு போல் எடுத்துச் சென்று ஒரு இடத்தில வைத்து விட்டு ஓடிவிடுவார். அதைப்பார்த்துக் கொண்டே இருந்த ஒருவர் அதனை எடுத்து, திறந்து பார்த்து விட்டு ஏமாந்து போவார். அதைப்போன்ற நிலைமைதான் இந்த படம் பார்த்த எனக்கும். மற்றும் எல்லோருக்கும். ■

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

ஆனி 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

**செம்மணி புதைகுழி**

**சிறப்புப் பார்வை**



# ஈழத்தமிழின அழிப்பின் சாட்சியமாகும் செம்மணி



● ஜெரா



# ஈழத்தமிழின அழிப்பின் சாட்சியமாகும் செம்மணி

செம்மணி மனிதப் புதைகுழி - மீண்டும் பேசத்தொடங்கியிருக்கிறது. பேரவலத்தின் பின் அங்கு புதைக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் அழுகுரல்கள் நீதியின் கதவைத் தட்டத் தொடங்கியிருக்கின்றன. கடந்த ஏப்ரல் மாதம் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக கிடங்கொன்றை வெட்டியபோது மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளின் பயனாக கடந்த வாரத்தில் முறைப்படியான புதைகுழி அகழ்வுகள் குறித்த பகுதியில் இடம்பெற்றன. இந்த அகழ்விற்காக சித்துப்பாத்தி மயானத்தில் ஏற்கனவே மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட குழி முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனாலும் அதிகம் ஈரலிப்பாக குறித்த அகழ்வுக்குழி காணப்பட்டதனால், அதனை அப்படியே விட்டுவிட்டு எழுமாற்றாக ஓரிடத்தில் அகழ்வாய்வை நடத்தினர். அந்த இடத்தில் மாத்திரம் நான்கு நாட்கள் இடம்பெற்ற அகழ்வாய்வுகளில் சிறுவர்களது என சந்தேகிக்கப்

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI



படும் மனித எலும்புக்கூடுகள் உட்பட 19 எலும்புக்கூடுகள் இதுவரையில் முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மிகப்பெரும் மனிதப் புதைகுழி காணப்படலாம் எனச் சந்தேகிக்கப்படும் செம்மணி வெளியில் தொடர்ச்சியாக 45 நாட்கள் புதைகுழி அகழ்வுகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதியளித்திருக்கின்றது. கடந்த சனிக்கிழமையுடன் (07) முதலாம் கட்டமாக நிறைவுக்குவந்த அகழ்வுப்பணிகள், வரும் 26ஆம் திகதி தொடக்கம் இரண்டாம் கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்நிலையில் செம்மணி மனிதப்புதைகுழி விடயத்தை பற்றி பின்னோக்கி பார்ப்பது காலத் தேவையானதாகும். முதன்முதலில் பாடசாலை மாணவி கிருசாந்தி படுகொலையுடன் ஆரம்பமான செம்மணி மனிதப்புதைகுழி வெளிக்கொணர்வுகள் இலங்கைத்தீவில் தமிழர்கள் எப்படியெல்லாம் இனவழிப்பு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பதிவுசெய்யவேண்டியுள்ளது. அதற்கான ஒரு பதிவாக இந்தப் பெருங்கட்டுரைத் தொகுப்பு அமையும்.

ஈழத்தமிழின அழிப்புக்கு திரட்சித் தன்மைமிக்க ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி இருப்பதையும், பல்வேறு காலகட்டங்களிலும், பல வடிவங்களில் இன அழிப்பு அல்லது இனச் சிதைப்பு மேற்கொள்ளப்பட்டதென்பதையும் அந்தத் தரவுத் தேட்டங்கள் காணத்தவறியிருக்கின்றன.

ஓர் இன அழிப்பின் முதல் இலக்கு ஆண்கள் என்றால், அதன் இரண்டாம் இலக்கு பெண்கள்தான். ஆயிரம் ஆண்களைக் கொன்று வீசுவதால் எழும் அதிர்வைவிட, ஒரு பெண்ணை பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கிக் கிழித்துப்போடுதல் பேரதிர்வை ஏற்படுத்தும். இன அழிப்புக்குள்ளாக்கும் மக்களின் உளவியலை மோசமாக மிரட்சியடையச் செய்யும். கிருசாந்தி தொட்டு, இசைப்பிரியா வரை அதனை அவதானித்திருக்கிறோம். அனுபவித்திருக்கிறோம். அதில் முக்கியமான இனவழிப்பு ஆவணமாக யாழ்ப்பாணம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தியின் படுகொலையும், அதற்குப் பின்னரான செம்மணிப் புதைகுழியும் பதிவுசெய்யப்படல் வேண்டும்.

செம்மணி ஓர் இனத்தின் மீது நடத்தப்பட்ட கூட்டு இனப்படுகொலையின் அடையாளம். ஆனால் அது விரைவாகவே மறக்கப்பட்டாயிற்று. இங்கு பிரயோகமாகும், தாமதிக்கப்படும் நீதி வழங்கலானது, அநீதிக்கு சமமானதாக மாறிவிடுகின்றது.

தமிழர்கள் மனங்களிலிருந்து என்றும் அகலாத படுகொலை நினைவுகளுக்குள் செம்மணியும் உள்வாங்கப்படல் வேண்டும். 600க்கும் மேற்பட்ட தமிழ் உயிர்கள் புதைக்கப்பட்ட அந்த வெளி ஒரு படுகொலையின் காட்சிப் படிமமாக நிறுவப்பட்டால் அது தெற்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் வரும் சுற்றுலாவிகளுக்கு நம் இனத்துயர் செய்தியை அறிவிக்கும்.

இதில் இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். வெறுமனே இனப்படுகொலை நடக்கின்றது என்பதை ஒரு சம்பவக் குறிப்பாக மட்டும், ஒரு வரியில் குறிப்பிட்டுத் தீர்மானம் வெளியிடல் போதாமைகளைக் கொண்டதாகக் கணிக்கப்படும். இங்கு நடந்தது இனப்படுகொலைதான் என்பதை நிரூபிக்க ஆதாரபூர்வமாக, சம்பவக் கோர்வையாக அவற்றை தொகுத்து வெளியிடவேண்டும். உலகளவில் அநீதிக்குள்ளான இனங்கள் அதனையே செய்திருக்கின்றன. அவ்வாறு செய்தலே அது ஆரோக்கியமுள்ள அரசியல் பயணமாக அமையும்.

யாழ்ப்பாணம் வரவேற்கின்றது,வளைவு இப்போது புதிய வடிவம் பெற்றுவிட்டது. ஒருவித அபிவிருத்தியின் மெருகூட்டலுடன் அனைவரையும் வரவேற்றுக் கொண்டிருக்கிறது. ஈழத்தமிழர் மறந்துபோன வரலாற்றுப் பக்கங்களில் முக்கியமான மூன்று சம்பவங்களை இந்த மையம் வைத்திருக்கிறது.

1995 இல் இந்தச் செம்மணியை ஊடறுத்துச் செல்லும் ஒற்றைப் பாதையாலேயே ஒட்டுமொத்த யாழ்ப்பாண மக்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம்பெயர்வை மேற்கொண்டனர். 1996 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இந்த இடத்தில்தான் கிருசாந்தி தொலைக்கப்பட்டாள். 2000 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட படையியல் நடவடிக்கை இந்த வளைவு வரை விரிந்திருந்தது.

இந்த மூன்று சம்பவங்களும் தமிழர்களால் மறக்கப்பட முடியாதவைதான். ஆனால் மறதியின் அரசியல் அனைத்தையும் மூடச் செய்திருக்கின்றது. விரும்பியோ, விரும்பாமலோ மறந்துபோவதை விரும்புகின்றோம். அப்படியான காலத்தில்தான் கிருசாந்தியை மறதியின் அடுக்குகளிலிருந்து மீண்டும் கிளறியெடுக்க வேண்டியிருக்கின்றது.

1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 07 ஆம் திகதி ஒரு விபத்து நடந்தது. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் உயர்தரம் கற்றுக்கொண்டிருந்த மாணவியொருவரை இராணுவ வாகனம் மோதிக்கொன்றது. இராணுவத்துக்கு எதிராக மூச்சுக்கூட விடுவதற்கான சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்த அந்தக் காலத்தில் மாணவிகள் அமைதியாக சாவு வீட்டைக் கடைப்பிடித்தனர். வெள்ளைச் சீருடைகளுக்கு தனியான மரியாதையுண்டு என்ற பொது மதிப்பீட்டின் அடிப்படையில் தனியாகவும், சேர்ந்தும், தம் லேடீஸ் சைக்கிள்களில் நாவற்குழியிலிருக்கும் அந்த செத்த வீட்டிற்கு சென்றுவந்தனர்.

அந்த நம்பிக்கையை கையில் பிடித்துக்கொண்டு தன் சைக்கிளில் இறுதிச் சடங்கிற்குப் போன கிருசாந்தி தனியே வீடு திரும்பிக்கொண்டிருந்தாள். வெட்டைக் காற்று பேயென அடித்துக்கொண்டிருந்தது. எப்போதாவது கடக்கும் வாகனங்கள் அவளைக் கடந்துபோய்க்கொண்டிருந்தன சிலர் அவளை அவதானித்துமிருந்தனர்.

அவர்கள் அவதானித்தவேளையில் இராணுவத்தினர் அவளை “யாழ்ப்பாணம் வரவேற்கிறது“ வளைவுக்கு அருகில் நிறுத்தி விசாரித்துக் கொண்டிருந்தனர். அதன் பின்னர் அவளுக்கு என்ன நடந்தது என்ற விடயம் ஆறு வாரங்கள் கழித்து வந்த பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் செய்தியாக வெளிவந்தது.



# செய்தி



"அச்சமயம் அங்குள்ள கொட்டகை ஒன்றுக்குள் இருந்த கோப்ரல் ஒருவர் மாணவியை உள்ளேகொண்டுவருமாறு கட்டளையிட்டதை அடுத்து சோதனைக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மாணவியை உள்ளேகொண்டு சென்றனர்.

மகள் பாடசாலையிலிருந்து திரும்பாததால் தாயாரும், தம்பியாரும் அவளைத் தேடிப் புறப்பட்டனர். அவர்களும் அதே சோதனை முகாமை அடைந்தனர். அங்கு ஒரு மணித்தியாலம்வரை காத்திருந்தனர். அவர்களும் வீடு திரும்பாததையிட்டு அயலவர் ஒருவரும் அந்தச் சோதனை முகாமுக்கு தேடிச்சென்றார். ஏற்கனவே வீடு திரும்பாத மூவர் குறித்து சம்பந்தப்பட்ட அயலவர் விசாரித்தபோது அவரும் உள்ளே கூட்டிச்செல்லப்பட்டார். அவர்கள் இராணுவத்தினரின் தங்கும் அறையின் பின்புறத்தில் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் வைக்கப்பட்டனர்.

மாணவி கிருசாந்தி வேறிடத்தில் வைக்கப்பட்டிருந்தாள். பின்னர் இரவு பத்து மணியளவில் கிருசாந்தி தவிர்ந்த மூவரும் கழுத்தியில் கயிற்றால் நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் ஒரு குழியிலும், மற்றொருவர் இன்னொருகுழியிலுமாகப் புதைக்கப்பட்டனர்.

பின்னர் நள்ளிரவு 12 மணியளவில் மாணவி கிருசாந்தியை பதினொரு பேர் வன்புணர்வு செய்து கொலைசெய்தனர்"

**- உதயன் (27.10.1996)**





*1996 ஆம் ஆண்டு கிருசாந்தியின் படுகொலை யாழ்ப்பாணத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இலங்கை நாடாளுமன்றத்திலும், சர்வதேச அரங்குகளிலும் முக்கியமான பேசு பொருளாக இந்தவிடயம் எடுத்துக் கொள்ளப்பட்டது.*

*தம் மீது விழுந்த குற்றச்சாட்ட போக்குவதற்கு உடனடி விசாரணையை இராணுவத்தரப்பு ஆரம்பித்திருந்தது. அதன் விளைவாக ஏழு இராணுவத்தினரும், இரண்டு பொலிஸாரும் கைது செய்யப்பட்டனர். அவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் அளித்த வாக்குமூலம் கீழே பதிவிடப்படுகின்றது.*

## வாக்குமூலம்

1996 ஆம் ஆண்டு அரியாலை துண்டிப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாமில் சிவில் நிர்வாகப் பகுதியில் கட்டளை அதிகாரியான கப்டன் லலித் ஹோவுக்கு கீழ் பணிபுரிந்தேன். அரியாலை, துண்டுப் பகுதியில் வீடுகளில் உள்ளவர்களின் விவரங்கள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள இளைஞர்களின் விவரங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தப் பணியை மேற்கொண்டிருந்த சமயம் புலனாய்வுப் பிரிவு வேலையும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

புலனாய்வுப் பிரிவு வேலைகளுக்கு கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தன ஆகியோர் உட்பட சில வீரர்கள் இந்தப் பிரிவில் இருந்தனர். அவர்களின் கீழ் நான் செயற்பட்டேன். இந்தச் சந்தர்ப்பத்தில் அரியாலைப் பகுதியில் சுற்றி வளைப்பு ஒன்றை இராணுவத்தினர் நடத்தனர். அந்தப் பகுதியில் உள்ள வீடுகளில் இருந்த சகலரையும் வெளியே அழைத்து வந்து நெடுங்குளம் எனும் இடத்தில் ஒன்றுசேர்த்து விசாரித்தோம்.

அந்த சந்தர்ப்பத்தில் இங்கு மேஜர் வீரக்கொடி, மேஜர் குணசேகர ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். அவர்கள் முகமூடி அணிந்த இருவரை அழைத்து வந்து அங்கு நின்ற பொது மக்கள் முன்நிறுத்தினர். அந்த இரு முகமூடி நபர்களும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனத் தெரிவித்து ஐம்பது பேரை அடையாளம் காட்டினார்கள். அங்கு ஐம்பது பேரும் வீடியோ படம் எடுக்கப்பட்டதுடன் எம்மிடமிருந்த பெயர்ப் பட்டியலுடன் அவர்களின் பெயர் விபரங்கள் ஒப்பிட்டும் பார்க்கப்பட்டன. பின்னர் அவர்களின் வீட்டு முகவரிகள் பெறப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

விடுதலைப் புலிச் சந்தேகநபர்களைக் கண்டு பிடிக்க அந்த முகவரியின் படி முயற்சிகள் எடுக்கப்பட்டன. அரியாலைப் பகுதியில் மக்கள் எவ்வாறு கைதுசெய்யப்பட்டார்கள்? எவ்வாறு கொல்லப்பட்டார்கள்? எங்கு புதைக்கப்பட்டார்கள்? என்ற விவரங்களை என்னால் நிச்சயமாகக் கூறமுடியும்.

அரியாலைப் பகுதியில் முதலில் கைதானவார்கள் தபால்கட்டுச் சந்தியில் 7 ஆவது காலாட் படையணிப் பிரிவில் தடுத்து வைக்கப்படிருந்தனர். கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தனா தலைமையில் இயங்கிய "சி" பிரிவிலும், அரியாலையில் உள்ள கட்டடத்திலும் பலர் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர். மற்றொரு தடுப்பு முகாம் தபால்கட்டை சந்தியில் இருந்து செல்லும் பாதையில் பாடசாலைக்கு அருகில் உள்ள விடுதலைப் புலிகள் அமைத்த முன்னைய அலுவலகத்தில் இயங்கியது. கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் செல்வரத்தினம் என்பவரைக் கைது செய்து "சி" பிரிவு முகாமில் தடுத்து வைத்திருந்தனர். அவரைக் கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தன, லெப்டினன்ட் துடுகல்ல ஆகிய மூவரும் சேர்ந்து கைதுசெய்தனர். அவரை விடுவிக்குமாறு அவரது மனைவி, பிள்ளைகள், என்னிடம் கேட்டனர். இதனையடுத்து அந்த முகாமுக்கு சென்ற சமயம் செல்வரத்தினம் என்னைக் கண்டதும் தான் விடுதலைப் புலிகளுடன் தொடர்பற்றவர் எனத் தெரிவித்து தன்னை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மன்றாட்டமாகக் கேட்டார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இல்லாதவர் என்பதால் அவரை விடுவிக்குமாறு கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தன ஆகியோரிடம் கோரினேன். அவரை விடுவிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். ஆனால் அன்று இரவே அவரைக் கொலை செய்து விட்டார்கள். மறுநாள் நான் போனபோது அங்கு 10 சடலங்கள் கிடந்தன.

# சித்திரவதை





மற்றொரு சம்பவத்தில் யோகேஸ்வரன் என்பவர் கடமை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் தயா கட்டடத்தில் உள்ள முகாம் படையினர் அவரைக் கைது செய்தனர். அடுத்தநாள் "சி" வதை முகாமுக்கு கொண்டு சென்றனர். இந்தமுகாம் கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வீடுகளில் இருந்தது. பிரஸ்தாப நபரை விடுவிக்குமாறு மேலிடத்தில் இருந்து கிடைத்த உத்தரவை அந்த முகாமுக்கு எடுத்துச் சென்றேன்.

அங்கு அவர் தலைகீழாகக் கட்டப்பட்டிருந்தார். பிளேட்டினால் அவரது உடலில் வெட்டிக் காயப் படுத்திக் கொண்டிருந்தனர். கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனா, லெப்டினன்ட் துடுகல்ல, உதயமார ஆகியோரே இந்தச் சித்திரவதையை செய்து கொண்டிருந்தனர். அந்த சித்திரவதை முகாமில் பாவித்த பொருள்கள் இப்போதும் அங்கிருக்கின்றன. (வாக்குமூலம் கொடுக்கப்பட்ட காலம்) அந்த முகாமில் இருந்த நபர் ஒருவரை பொல்லால் தாக்கி கொலை செய்து அங்குள்ள வீடு ஒன்றில் முன்னால் புதைத்தார்கள்.

## பாஸ் பெற வந்தோருக்கு ஏற்பட்ட கதி

அரியாலையைச் சேர்ந்த பார்த்தீபன், சுதாகரன் என்ற இரு இளைஞர்கள் கைதடி சென்று வியாபாரம் செய்ய பாஸ் பெற்றுத் தருமாறு என்னிடம் கேட்டார்கள். இது குறித்து கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனாவிடம் கேட்டேன். அவர்களை முகாமுக்கு வருமாறும், அங்கு வைத்து பாஸ் வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தகவலை அந்த இளைஞர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் முகாமுக்கு சென்றனர். மறுநாள் அந்த இளைஞர்களின் உறவினர்கள், அந்த இளைஞர்கள் இருவரும் இன்னும் வீட்டுக்குத் திரும்பி வரவில்லை என்று என்னிடம் தெரிவித்தனர் அந்த இளைஞருக்கு. கைதடியில் வியாபாரஞ் செய்ய அனுமதிக் கடிதம் வழங்குவதாகத் தெரிவித்த கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனா, லெட்டினன்ட் துடுகல்ல ஆகியோர் அந்த இளைஞர்கள் இருவரையும் தலைகீழாகக் கட்டித் தூக்கிவிட்டுத் தாக்கியதைக் கண்டேன். மறுநாள் இரு இளைஞர்களும் இறந்துவிட்டனர்.

அரியாலை முகாமில் பணிபுரிந்த அப்துல் நஷார், ஹமீத் சமரசிங்க ஆகியோர் நன்றாகத் தமிழ் கதைப்பார்கள். அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றைக் காட்டுமாறு என்னிடம் கேட்டார்கள். இரவு நேரத்தில் அந்த வீட்டைக் காட்டினேன். அங்கு ஓர் ஆணும், பெண்ணும் இருந்தார்கள்.

"அந்த வீட்டின் சொந்தக்காரர் எங்கே?" என்று அவர்களிடம் கேட்டோம். "முன்வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று பதில் அளித்தனர்.

அதையடுத்து கப்டன் லலித் ஹோவகேயும், அப்துல் நஷார் ஹமீத்தும் அந்த வீட்டுக்கு சென்றனர். அங்கிருந்த இளம் தம்பதியினரைக் கைதுசெய்தனர். அவர்களை முதலில் "சி" சித்திரவதை முகாமுக்குக் கொண்டு சென்றனர்.


பின்னர் இருவரையும் செம்மணியில் உப்பளப் பகுதிக்குக் கொண்டு சென்றனர். அவ்வாறு அவர்களைக் கூட்டிச் செல்லும்போது மண்வெட்டியை எடுத்து வரும்படி என்னிடமும், ஏ.எஸ் பெரேராவிடமும் கப்டன் லலித் ஹேவகே தெரிவித்தார். அதன்படி நாம் இருவரும் துப்பாக்கியுடன் மண்வெட்டியையும் கொண்டு சென்றோம். நான் செல்லும்போது கப்டன் ஹேவகே அந்தப் பெண்ணுடன் தனிமையில் நிற்பதைக் கண்டேன். அச்சமயம் அந்தப் பெண்ணின் உடலில் ஆடைகள் எதுவும் இருக்கவில்லை.

பின்னர் அந்தப் பெண்ணின் கணவன் இருக்கும் இடத்துக்குப் பெண்ணை அழைத்துவந்தனர். என்னிடம் இருக்கின்ற மண்வெட்டியை வாங்கிய கப்டன் ஹேவகே இருவரின் தலையிலும் அடித்தார். அவருடன் இருந்த அப்துல் நஸார், ஹமீத், சமரசிங்க ஆகியோர் பொல்லுகளால் அவர்களைத் தாக்கினர்.

இருவரும் கீழே விழுந்துவிட்டனர். இருவரின் சடலங்களையும் எம்மை புதைக்கும்படி கூறிவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர். நாம் அந்தச் சடலங்களைப் புதைத்தோம். அந்த இடத்தை என்னால் அடையாளம் காட்ட முடியும். அரியாலைப் பகுதியைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். அங்குள்ள மக்களுடன் நன்றாகப் பழகியதால் என்னைப் பற்றி மக்கள் நன்றாகச் சொல்வார்கள். எனக்கு தமிழ் தெரியாததால் எனது சிவில் நிர்வாகப் பணிகளுக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த குணரத்தினம் என்பவரைப் பயன்படுத்தி வந்தேன். அரியாலைப் பகுதிக்கு நான் கடமைக்கு வர முன்பு அங்கு 50 பேர் காணாமல் போயிருந்தனர் என்று அறிந்தேன். அவர்கள் "சி" முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

கல்லூரி மாணவியான கிருசாந்தியின் சடலம் என்னிடம் புதைக்கப்படுவதற்காக ஒப்படைக்கப்பட்டபோது அந்தச் சமயம் அது கிருசாந்தியின் சடலம் என்று எனக்குத் தெரியாது. வழமையாக உயர் அதிகாரிகள் பொதுமக்களைக் கொலைசெய்துவிட்டு சடலத்தைப் புதைக்கும்படி என்னிடம் தருவார்கள். நான் அவற்றை புதைக்க ஏற்பாடு செய்வேன். கிருசாந்தி கொலையுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை, சடலத்தைப் புதைத்ததைத் தவிர.

இந்தக் கொலை தொடர்பாக உயர் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பும், பின்பும் இதனையே கூறினேன். கிருசாந்தி கொலை வழக்கில் முறைப்பாட்டுக்காரர்களின் வாக்குமூலங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன. ஆனால் எதிரிகளின் வாக்குமூலங்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.



குற்றவாளி ஒருவர் அழைத்துச் செல்லப்படுகிறார்



சோமரத்ன ராஜபக்ச (நடுவே வெள்ளை சட்டையுடன் இருப்பவர் சாட்சியமளிக்கிறார்



குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினர் விசாரிக்கப்படுகின்றனர்



புதைகுழி தோண்டும் படலம் ஆரம்பம்



பார்வையிடும் காணாமற் போனவர்களின் உறவினர்கள்

# கொலைப் பயமுறுத்தல்

செம்மணியில் புதைகுழி இருப்பதாக நான் சாட்சியம் அளித்தால் எனது குடும்பம் கொலைசெய்யப்படும் என்று அச்சுறுத்தல் கடிதங்கள் வந்தன. அவற்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளேன். செம்மணி மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள 10 மனிதப் புதைகுழி இடங்களை நான் அடையாளம் காட்டுவேன். தூக்குத் தண்டணை விதிக்கப்பட்ட ஏ.எம். பெரேரா ஐந்து இடங்களைக் காட்ட இருக்கின்றார். அதில் ஒன்றில் மட்டும் 25 முதல் 30 வரையான சடலங்கள் ஒன்றாகப் போடப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன. மற்றுமொரு கைதியான ஜெயதிலகவும் சில புதைகுழிகளைக் காட்டத் தயாராக இருக்கின்றார்.

என்னால் சடலங்கள் புதைக்கப்பட்ட மூன்று இடங்களைத் தற்சமயம் அடையாளங்காட்டமுடியாது என்று நினைக்கிறேன். இந்த சம்பவங்கள் நடந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் வாக்குமூலம் அளித்து ஒரு வருடமாகிவிட்டது. ஆனால் அங்கிருந்து எலும்புகள் எடுக்கப்பட்டதாக அறிகிறேன். இதற்காகவே மண் மாதிரிகளை எடுக்குமாறு கோரினேன். படையினரையோ, நாட்டையோ காட்டிக்கொடுக்க நான் வாக்குமூலம் அளிக்கவில்லை. எனக்கு ஏற்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கவும், சில இராணுவ அதிகாரிகளின் செயல்களை அம்பலப்படுத்தவுமே இந்த வாக்குமூலத்தை அளிக்கிறேன். எனக்கு இந்த நீதிமன்றத்தால் நீதி கிடைக்காமல் போனாலும் சர்வதேச நீதிமன்றம் மூலம் நீதி கிடைக்கும் என நினைக்கிறேன்."

- சோமரத்ன ராஜபக்ச

# சாட்சியாளர்கள் பற்றி..



எப்போதும் அதிகாரத் தரப்பினரின் குற்றங்கள் கண்டுகொள்ளப்படுவதில்லை. அவர்களின் குற்றங்களைச் சுமக்க ஒரு தொகுதி தரப்பினர் தகுதி பெற்றவர்களாக இருக்கின்றனர். கிருசாந்தி படுகொலையிலும் அதுவே நடந்தது.

கிருசாந்தி வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற விடயம் தெரியவந்தவுடன் யார் தலையிலாவது அந்தக் குற்றத்தை கட்டிவிட வேண்டிய தேவை அப்போது அதிகாரத்திலிருந்தவர்களுக்கு எழுந்தது. அதில் முதலில் சிக்கியவர் சோமரத்ன ராஜபக்ச. அவரளித்த வாக்குமூலங்களில் தன்னை ஒரு கீழ்நிலை துருப்பினனாகவும், தமிழர்கள் படும் இன்னல்களைப் புரிந்துகொண்டவராகவும் வெளிப்படுத்தியிருக்கின்றார். அதிலிருக்கின்ற உண்மை, பொய்களுக்கு அப்பால் ஒரு சிங்களத் துருப்பினன், நடந்து முடிந்த படுகொலையின் சாட்சியமாக மாறியிருந்தமை வரலாற்றில் குறிப்பிடவேண்டிய ஒன்று.

அதனால்தான் என்னவோ சோமரத்ன ராஜபக்ச ஏனைய துருப்பினர் போலல்லாமல் அதிக தண்டனையை அனுபவிக்க வேண்டிய நிலையை எதிர்கொண்டார். சோமரத்ன ராஜபக்ச கொடுத்த வாக்குமூலத்தின் பின்னர் அவர் எதிர்கொண்ட பாதிப்புகள் அதிகம். சிறைக்கூடத்துக்குள்ளேயே தாக்குதலுக்கு இலக்கானார். அவரது குடும்பம் துப்பாக்கி குறிகளுக்கு முன்னதாக நிறுத்தப்பட்டது. இவ்வளவு அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு சாட்சிசொன்னார் அந்தச் சிங்களவர். ஆனால் ஒரேயொரு சாட்சியத்தோடு அடக்கி வாசிக்கப் பழகிக் கொண்டார்.

இவருடன் சேர்ந்து மேலும் எட்டுப் படையினர் கைதாகியிருந்தனர். ஜெயசிங்க, பிரியதர்சன பெரேரா, அல்விஸ், முத்துபண்டா, ஜெயதிலக, இந்திரகுமார நிஸாந்த என்பர்களே கைதுசெய்யப்பட்டிருந்தனர். இதில் இருவர் தப்பியோடியிருக்க அல்விஸ் மூளை மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு இறந்துபோனார். மிகுதியானவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

அத்தோடு கைதுசெய்யப்படவர்கள் இனங்காட்டிய இராணுவ உயரதிகாரிகள் பின்னர் விசாரிக்கப்பட்டார்களா என்பதற்கான ஆதாரங்கள் மிகக்குறைவு. அதில் சம்பந்தப்பட்ட சில அதிகாரிகள் போரில் இறந்துவிட்டனர் என்றும் காயப்பட்டனர் என்றும் செய்திகள் வந்தன.

பெரேரா, ஜெயசிங்க போன்றோர் ஏனைய இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் இருப்பதாக தெரிவித்திருந்தனர். அவர்களிடமும் இந்தப் படுகொலை தொடர்பிலான ஆதாரங்கள் இருந்தன.

ஆனால் அவர்களின் கதைகள் பெரியளவில் கவனத்தில் எடுக்கப்படவில்லை. சோமரத்ன ராஜபக்ச காட்டிய இடங்களும், அவர் கொடுத்த வாக்குமூலத்துக்கு அமைவாகவுமே புதைகுழிகள் தோண்டப்பட்டன. இங்கு கைதாகிய இராணுவத்தினர் அரியாலைப் பகுதியை சேர்ந்தவர்கள் மட்டுமே. இந்தப் பகுதியில் நடந்த காணாமல் போதல், கைதுகள் தொடர்பிலான ரகசியங்கள் மட்டுமே அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் ஏனைய பகுதிகளில் பரவலாக நடத்தப்பட்ட சட்டவிரோத கைதுகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள் பற்றிய தகவல்கள் அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஒருவர் கொடுத்த வாக்குமூலத்திலேயே இவ்வளவு தொகையானவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கின்றனர் என்பது தெரியவந்தது என்றால் அந்தக் காலத்தில் பணியாற்றிய ஒவ்வொரு துருப்பினருக்கும் எத்தனை குழிகள் தெரிந்திருக்கும்அங்கு என்ன நடக்கின்றது என்று யாருக்கும் எதுவும் தெரியவில்லை.

இவர்களின் கைதுகளும் குற்ற ஒப்புதல்களும் இலங்கை இராணுவத்தின் மெய்வடிவத்தை வெளிச்சமிட அப்போது போதுமான செய்தியாக இருந்தது. ஆனாலும் வழமை போலவே இலங்கையின் அரச தரப்பு இராணுவத்தின் குற்றங்களை உடனடியாக ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. கால நீடிப்பின் ஊடாக அநீதியை நிலைநாட்டலாம் என்ற அதீத நம்பிக்கையில் செயற்பட்டது. அது சாத்தியமும் ஆனது. 1996 ஆம் ஆண்டில் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்ட செம்மணி விவகாரம் 1999 ஆம் ஆண்டின் நடுப்பகுதிவரை இழுபட்டது.

இந்த மனிதப் புதைகுழியில் கிட்டத்தட்ட 400 பேர் புதைக்கப்பட்டிருந்தனர் என்று குற்றமிழைத்தவர்கள் ஒப்புக்கொண்டனர். அந்தக் காலப்பகுதியில் யாழில் 600 பேருக்கும் அதிகமானோர் காணாமல் போயிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் என்ன நடந்தது என்பதை இன்று வரை அறியமுடியவில்லை. சிலருக்கு இறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

மிகுதியான இளைஞர், யுவதிகைளத் தேடும் பணியை அவர்களின் பெற்றோர் இன்னமும் கைவிடவில்லை.

இந்தக் கைதுகளுக்கும் காணாமல் போதல்களுக்கும் பின்னணியில் சொல்லப்படும் காரணம் புலிகள் அல்லது புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் என்பதே. ஆனால் காணாமல் போனவர்களில் பலர் வெறும் அப்பாவிகள் என்பதை ஊரும், உறவுகளும் அறிந்தே வைத்திருக்கின்றனர்.

1996 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட யாழ்ப்பாணத்தினுள் பெருமளவிலான விடுதலைப் புலிகள் ஊடுருவி விட்டனர் என்ற சந்தேகமே இளைஞர் கைதுகளுக்கு காரணமாக சொல்லப்பட்டது. இந்த சந்தேகம் பொய்யானதாக இருந்தபோதிலும் அந்த ஆண்டில் முல்லைத்தீவில் இழக்கப்பட்ட 1, 200 சிப்பாய்களின் உயிர்களுக்கு பதிலீடு யாழ்ப்பாணத்தில் சரிசெய்யப்பட்டது என்பது தமிழர்களுக்குத் தெரிந்தே இருந்தது.

யாழ்ப்பாணத்தை இழந்த புலிகள் உடனடியாக ஓர் இராணு வெற்றியை அடைய முயன்றனர். முல்லைத்தீவு இராணுவத் தளம் மீதான தாக்குதல் யாழ்ப்பாண இழப்பைச் சமன்செய்தது. அத்துடன் இராணுவத்தரப்பிற்கு ஆளணி மற்றும் படையப் பொருள்கள் ரீதியிலான பேரிழப்பையும் இந்தத் தாக்குதல் ஏற்படுத்தியது. அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் தனது வேட்டையை இராணுவம் ஆரம்பித்தது. இனப்படுகொலையை ஒத்த இந்த வகை பலியெடுப்பு யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்தது. அதன் விளைவே செம்மணி மனிதப் புதைகுழி.

புதைகுழிகள் அடையாளம் காட்டப்பட்ட பின்னரும் அப்போதிருந்த இலங்கை அரசு பெருங்கால நீடிப்பை திட்டமிட்டு உருவாக்கியிருந்தது. உள்நாட்டு அரசியல் கட்சிகளும், பாதிக்கப்பட்ட மக்களும், மனித உரிமை அமைப்புக்களும், சர்வதேச மன்னிப்புச் சபையும் முன்வைத்த கோரிக்கைகளுக்கும், போராட்டங்களுக்கும் நீண்டகாலமாக அரசு பதிலளிக்கவில்லை. விசாரணை, நீதிமன்றத்தீர்ப்பு, குற்றவாளிகளின் உடல்நிலை பாதிப்பு, சரியான நிபுணர்கள் இன்மை, தோண்டுவதற்குரிய காலநிலை இன்னும் வரவில்லை எனப் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

ஆயினும் சர்வதேச மன்னிப்புச் சபையும், பிற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளும் பிரயோகித்த அழுத்தத்திற்கு இலங்கை அடிபணிந்தது. அதைவிட கிருசாந்தியின் சார்பில் வழக்கை முன்நின்று நடத்திய குமார் பொன்னம்பலம் போன்ற சட்டத்தரணிகள் அப்போதைய ஆளுந்தரப்பிடம் செல்வாக்கு செலுத்தக்கூடியவர்களாகவும். நேரடித் தொடர்புகளை கொண்டிருந்தவர்களாக இருந்தனர். அரசிடம் அவர்களுக்கு இருந்த செல்வாக்கின் காரணமாகவும் இந்த விடயத்தை மூடிமறைக்க முடியவில்லை. விசாரணை குழுக்கள் தொடர்ச்சியாக இயங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்தக் கூட்டு அழுத்தங்களின் விளைவாக 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி செம்மணி மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் பணி ஆரம்பமாகியது. அமெரிக்க நிபுணர்கள், சர்வதேச மன்னிப்புச் சபை. ஏசியா பௌண்டேசன் அதிகாரிகள், துறைசார்ந்த பேராசிரியர்கள், பொதுமக்கள், உள்ளூர் அதிகாரிகள், அமைப்புகள், சர்வதேச ஊடகங்கள் கண்காணிப்பில் முன்னிலை வகித்தன. சோமரத்ன ராஜபக்ச முதலில் ஒரு புதைகுழியை அடையாளம் காட்டினார். முதல் கட்டமாக அவர் காட்டிய இடத்திலிருந்து 2 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளில் ஒன்றில் கைகள் இரண்டும் கட்டப்பட்டிருந்தன. மற்றைய எலும்புக் கூடு சேதம் அடைந்திருந்ததால் கைகள், கண்கள்





கட்டப்பட்டிருந்தனவா என்பதை அறிய முடியவில்லை. கண்கள், கைகள், கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட எலும்புக் கூட்டின் மண்டையோட்டுப் பகுதியில் காணப்பட்ட ஆழமான சிதைவுகள் அடித்துத் தாக்கப்பட்டதால் ஏற்பட்டவையாக இருக்கலாம் என்று கணிக்கப்பட்டனர். இரண்டு எலும்புக்கூட்டிலும் அடிகாயங்கள் தாராளமாகக் காணப்பட்டன. ஒரு எலும்புக் கூடு நிமிர்ந்தும் மற்றையது பக்கவாட்டிலும் படுத்திருப்பது போன்று போடப்பட்டிருந்தன. இரண்டு எலும்புக் கூடுகளுக்கும் நடுவில் சிலிப்பர் கட்டைகள் காணப்பட்டன.

இந்த எலும்பு மீட்பு அதிக காலம் நீடிக்கவில்லை. இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதோடு புதைகுழி தோண்டும் படலம் இடைநிறுத்தப்பட்டது. தமது பிள்ளைகளின் எலும்புகளைத் தேடி செம்மணி புதைகுழிக்கு வந்திருந்த பெற்றோர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இந்த எலும்பு ஆதாரங்கள் யாழ்ப்பாணத்தை மனிதப் புதைகுழியின் நகராக்கியது. தென் ஆசியாவிலேயே அதிகளவாக மக்கள் கொன்று புதைக்கப்பட்ட இடமாக செம்மணிப் புதைகுழியை ஊடகங்கள் அடையாளப்படுத்தின. புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளுக்கு மறுநாளே உரிமைகோரல்களும் யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியிலிருந்து எழுந்தன. அரியாலையில் இருந்த இயந்திரத் திருத்தகம் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்த வேளையில் காணாமல் போன இரு இளைஞர்களின் எலும்புகளாக அவை இருந்தன. 1996 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி இருவரும் வேலை முடித்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது இராணுவத்தால் கைதாகிப் பின்னர் காணாமல் போயிருந்தனர்.

அதன்பின்னர் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் பற்றிய அறிக்கைகள் அடிக்கடி வெளியாகின. பல்வேறு தரப்பட்ட அரசியல் கட்சிகளும், உள்ளூர், சர்வதேச அமைப்புகளும் அதில் அடக்கம். ஏனைய சிப்பாய்களையும் செம்மணிக்கு கூட்டிவந்து மனிதப் புதைகுழிகளை அடையாளம் காட்டச் செய்ய வேண்டும் என்ற முடிவும் எடுக்கப்பட்டது. பக்கச்சார்பற்ற, நீதியான, விசாரணைகளை மேற்கொள்வதோடு, அனைத்துப் புதைகுழிகளையும் தோண்டி உண்மையைக் கண்டறியுமாறு செம்மணி வந்து திரும்பிய சர்வதேசப் பிரதிநிதிகள் கொழும்பில் அறிக்கைவிட்டனர். அதன் பின் அவர்களும் வாய்திறக்கவில்லை. பின்னைய நாள்களில் இந்தச் செய்திகளின் சூடு எப்படியோ குறைந்தது.

விசாரணைக் குழுக்கள் அடிக்கடி வருவதாகவும், செம்ரெம்பர் 6 ஆம் திகதி மறுபடியும் தோண்டப்படும் எனவும் ஓர் அறிக்கை அரச தரப்பிலிருந்து விடப்பட்டது. அதன்படி குறித்த திகதியில் மீண்டும் தோண்டும் பணிகள் ஆரம்பமாகின. அமெரிக்கப் பிரதிநிதிகள் எலும்பு மீட்புப் பணிகளைக் கண்காணிக்க வந்திருந்தனர். இறுதியில் முடிவுகள் எதுவும் காட்டாமலேயே இந்த விவகாரம் மந்தமாகியது. பின்னர் எதிராளிகளின் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு விசாரணை அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. அதன் பின்னர் நடந்த புதைகுழி தோண்டலில் அதிகளவில் சேதமடைந்திராத எலும்புக்கூடுகள் இரண்டை மறுபடியும் நிபுணர்கள் கண்டுபிடித்தனர்ஆனால் அவை யாருடையவை என்பதை அடையாளம் காண முடியவில்லை. மூன்றாம்







நாள் கண்டி வீதி- நல்லூர் நாயன்மார்கட்டு சந்திவீதி மூலையில் இருந்த இராணுவக் காவலரணின் பின்புறத்தில் மூன்று எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. அருகருகே புதைக்கப்பட்ட நிலையில் ஆடைகள் ஏதுமற்ற நிலையில் ஓர் இளம் பெண் மற்றும் ஆண் ஆகியோரின் எலும்புக் கூடுகளாக அவை இருந்தன. கொழும்புத் துறை பகுதியில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது கைதுசெய்யப்பட்ட தம்பதியினரின் எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாம், அவற்றின் மண்டையோடுகள் பிளந்து காணப்பட்டன. தலையில் அடித்துத் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட வெடிப்பாக அவையிருக்கலாம் என சட்ட மருத்துவத்துறை நிபுணர் பேராசிரியர் நெரியெல்ல குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ந்து புதைகுழி தோண்டும் பணிகள் நடந்தன. சாட்சியாளர்கள் காட்டிய சில இடங்களில் எலும்புக் கூட்டுத் தடயங்கள் எதுவும் இருக்கவில்லை. 20 பேரை புதைத்தனர் என்று சோமரத்ன ராஜபக்ச தெரிவித்திருந்த இடமும், கிணறும் தோண்டப்பட்ட போதிலும் அங்கு எலும்புக் கூடுகள் எவையும் இருக்கவில்லை. இதனால் சோமரத்ன மறுபடியும் செம்மணிக்கு அழைத்துவரப்பட்டார். அப்போது அவர் சொன்ன பதிலோடு, தோண்டும் பணிகள் நிறுத்தப்பட்டன.

“செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் உள்ள சரியான இடங்களையே நான் அடையாளம் காட்டினேன். அந்தப் புதைகுழிகளை தோண்டியபோது அங்கு சடலங்கள் காணப்படாததையிட்டு நான் அதிர்ச்சியடைகிறேன்”

அதுவரையில் செம்மணியில் இருந்து 15 வரையிலான சடலங்களின் எலும்புகள் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அத்தோடு தோண்டும் பணிகள் நிறுத்தப்பட்டன. அதே வருடத்தில் டிசம்பர் 6 ஆம் திகதி இதுவரையில் செம்மணியில் நடத்தப்பட்ட புதைகுழி ஆய்வு தொடர்பிலான அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

காலநிலை மாறியது. களநிலவரங்கள் மாறின. அடித்த மழையிலும், வன்னியில் எழுந்த போர் அலைகளிலும் எல்லாமே மறக்கப்பட்டன. 2000 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னரான ஆட்சி மாற்றமும் சமாதானமும் இந்தப் பெரியளவிலான மனிதப் படுகொலையை மறக்கச் செய்தன.

சோமரத்னவின் மரணதண்டனை பற்றிய செய்தியொன்று கடந்த வருடத்து முற்பகுதியில் வெளியானபோது அதைப்படித்ததாக நினைவு. அவரோடு கைதானவர்கள் எங்கே? என்ன நடந்தது போன்ற கேள்விகளும், செம்மணியில் புதைக்கப்பட்டவர்களின் நினைவைப் போல மறந்தேபோயிற்று. உலகளவில் நிரூபிக்கப்பட்ட இந்தக் குற்றம் அல்லது இனமொன்றை கூட்டுப் படுகொலை செய்தமைக்கான ஆதாரம் செம்மணி புதைகுழிக்குள்ளும் வருகின்றது. இதில் ஈடுபட்டவர்கள் சர்வதேச குற்றவியல் மன்றங்களில் விசாரிக்கப்படுவதும் தண்டனைக்குள்ளாவதும் அண்மைக்காலம் வரை நடந்துகொண்டேயிருக்கின்றது.

ஆனால் உலகின் கண்முன்னே, அமெரிக்காவின் கண்முன்னே சாட்சிபூர்வமாக நிரூபிக்கப்பட்ட செம்மணி மறக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. இது இலங்கையில் இடம்பெற்ற உள்ளக விசாரணையொன்றின் நம்பிக்கைத் தன்மையினையும், பொறுப்புக்கூறும் போக்கையும் எடுத்துக்காட்டவும் கைவசமுள்ள சிறந்த ஆதாரங்களில்

# பிற்குறிப்பு

அன்புள்ள அம்மா.

நீங்கள் அனுப்பிய கடிதத்தை வாசித்தேன்.கடிதத்தின்படி யாழ்ப்பாண மக்களின் மனவேதனைகளை என்னால் நன்கு உணரமுடிகின்றது. அதுமாத்திரமல்ல, இதுபோல் காணாமல்போனதாகக் கூறப்படும் பல இளைஞர்கள் பற்றிய விவரங்களையும் நான் அறிவேன். அவர்களுக்கு என்ன நடந்ததுபற்றி நானும் என்னுடன் சிறைவைக்கப்பட்டுள்ள உதவியாளர்களும் நன்கறிவோம். இருப்பினும் எனது உதவியாளர்களின் நிலைமை-யோ கவலைக்கிடம்.

மேஜர் வீரக்கொடி, கப்டன் லலித் ஹேவா மற்றும் அவர்களுக்கு கீழ்பணியாற்றிய இளைய அதிகாரிகளே இந்தஅநியாயங்களுக்குப் பொறுப்பானவர்கள். கிருசாந்தி மற்றும் அவரதுகுடும்பஉறுப்பினர்களின் படுகொலைகளுக்கும் இந்த அதிகாரிகளே பொறுப்பாவார்.

அம்மா! உங்கள் மகன் காணாமல் போன சம்பவத்திற்கும் கப்டன் ஹேவாவுக்கும் நேரடித் தொடர்பில்லை. உங்கள் மகன் பற்றி நான் எனது நண்பர்கள் மூலமாக விசாரித்தேன். உங்கள் மகன் விரைவில் அளுக்கடை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளார்.உங்களால் முடிந்தால் அனுராதபுரம் சென்று உங்கள் மகனைப்பற்றி விசாரித்தறிய முயற்சிக்கவும். இது தொடர்பாக முடிந்தளவு உதவியை நான் செய்வேன்.

அத்துடன் நான் தங்களிடமிருந்து ஒரு சிறு உதவியை எதிர்பார்க்கிறேன். அந்த நகைக்கடை பொடியனிடம் நான் நகைகள் வாங்கியது பற்றி கூறி அந்த நகைகளை வாங்கியதற்காக, “பில்” ஒன்றைப் பெற்று எனக்கு விரைவில் அனுப்பிவையுங்கள்.அவரது தந்தையிடம் முழுவிவரங்களையும் கூறுங்கள். கடந்த காலங்களில் இடம்பெற்ற பல விடயங்கள் குறித்து மனவேதனையடைவதுடன் அவற்றுக்காக மன்னிப்புக் கோருகின்றேன்.

**தங்களின்**
**சம்பத்**

(குறிப்பு – இந்தக் கடிதத்தில் சோமரத்ன ராஜபக்ச “சம்பத்” என ஒப்பமிட்டுள்ளார். அவரை அவரது வீட்டில் செல்லமாக “சம்பத்” என்றே அழைப்பார்களாம். செம்மணியில்இருப்பதாக நம்பப்படும் பெரும் மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக “யுக்திய“ வார இதழில் வெளியான கடிதத்தின் தமிழாக்கம். கிருசாந்தி குமாரசுவாமி வன்புணர்வு, கொலை வழக்கின் முதலாவது குற்றவாளியும், செம்மணி மனிதப் புதைகுழிகள் பற்றிய தகவல்களை வெளியிட்டவருமான சோமரத்ன ராஜபக்ச 1997 ஓகஸ்ட் மாதத்தில் காணாமல் போன ஒருவரின் தாய்க்கு ஆங்கிலத்தில் எழுதிய கடிதம்– கடித உதவி, உதயன்)

# ஒரு பத்தியும் அசட்டுத்தன மிரட்டலும்

மே மாதம் 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ‘எதிரொலி’ நிர்வாகத்தினரின் தொலைபேசிக்கு இரண்டு தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்டு தவறவிடப்பட்டிருந்தது. அந்தத் தொலைபேசி அழைப்புக்கு பதிலளிக்கும் வகையில் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட தொலைபேசி அழைப்பில் மறுமுனையில் ஒருவர் பதிலளித்தார்.

ஒரு அமைப்பின் பெயரைக் கூறி அதன் முக்கியமான பொறுப்பில் தான் இருப்பதாக தன்னை அறிமுகப்படுத்திவிட்டு,’ மார்ச் மாத எதிரொலியில் வெளியான ‘சமூக சேவையாளர்களா?’என்ற ஆசிரியர் தலையங்கத்தை யார் எழுதியது..? பெயர் போடப்படவில்லையே..?’ என்ற வினவலுடன் ஆரம்பித்தவர் போகப்போக மிரட்டும் தொனியில் உரையாடத்தொடங்கினார்.

எதிரொலியின் கம்பனி பதிசெய்யப்பட்ட ஆண்டு மற்றும் திகதியை சொல்லியவாறு தற்போது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியும் என்று ஆரம்பித்த மிரட்டல் உங்களை நான் சும்மா விடமாட்டேன் என்று எகிறிக்குதிக்குமளவுக்கு உச்சமடைந்தது.

இடையே ”உங்கட கட்டுரையை ஜூலியன் கில் எம்.பி.யும் கசேந்திரா பெர்னாண்டோ எம்.பி.யும் மொழி பெயர்ப்புச் செய்து தரச் சொல்லியுள்ளார்கள்” என்று சொல்லிக் கொண்டே எதிரொலி நிர்வாகத்தை சேர்ந்தவரிடம் அவரது குடும்ப உறுப்பினரின் ’விசா என்னகட்டம்?” என்றும் ஒருமறைமுக மிரட்டலை விடுக்கத்தவறவில்லை. அதுவரை அவரைப் பேச விட்ட எதிரொலி நிர்வாகம்,

“அந்தக் கட்டுரையை நீங்கள் தாராளமாக எம்.பி.க்களுக்கு சரியாக மொழிபெயர்ப்புச் செய்து கொடுங்கள். ஒரு பத்திரிகையிடம் நீதி கோர ஒரு முறையிருக்கிறது. அதன்படி நீங்கள் விளக்கம் கேட்டிருக்கலாமே? இப்படி தொலைபேசியில் மிரட்டுவது தவறானது.எமது நிர்வாகத்தில் இருக்கும் ஒருவரின் குடும்ப உறுப்பினரின் விசா குறித்து ஏன் கேட்டீர்கள்?” என்று கேட்டோம்.

அதற்கு அவர் “இரண்டு எம்.பி .மாரும் எதிரொலிக்கு எதிராக வழக்குத் தொடுத்தால் உங்கள் குடும்ப உறுப்பினரின் விசாவுக்கு சிக்கல் வரும்” எனப் பதிலளித்தார். ’எதிரொலி எந்த வழக்கையும் சந்திக்கத் தயார்’ என தெளிவாக அவருக்குச் சொல்லப்பட்டது. அதன் பின்னர் தன்னை சுதாகரித்துக்கொண்டவர் ‘இல்லை இல்லை நான் அந்த வகையில் சொல்லவில்லை. இந்த வகையில் சொல்லவில்லை’ என உருட்டிக்கொண்டேயிருந்தார். அதன் பின்னர் அந்த தலையங்கத்தை வாசித்தீர்களா எனக் கேட்டபோது ’அது வந்து வாசித்தேன். ஆனால் மறந்து போச்சு’ என்று இழுவல் பாணியில் சடைந்தார். மேலும் வழுவழுத்த அவரது வாதத்தை முடித்துக் கொண்டார்.

குறித்த பத்தி ஏன் குறித்த ஒரு அமைப்பினருக்கு மட்டும் இரத்தகொதிப்பை ஏற்படுத்தியது என்ற காரணம் எதிரொலிக்கு தெரியாது. ஆனால் மக்களுக்கு சிலவேளை புரிந்திருக்கலாம்.

இங்கு குறித்த அமைப்பின் முன்னால் வைக்கப்படும் கேள்விகளில் முக்கியமானது ’உங்கள் அமைப்பில் உங்களுடன் சேர்ந்திருக்கும் பல அகதிகளுக்கு இன்னும் நிரந்தர வதிவிட விசா இல்லை. உங்களுக்கு அமைச்சருடனான நெருக்கமிருப்பின் அந்த அகதிகளுக்கு நிரந்தரவதிவிட விசாவை பெற்று கொடுக்கலாமே..? நாம் 12,000 பேருக்கும் விசாவைக் கொடுங்கள் என்று உங்களை கேட்கவில்லை. ஒரு சிலருக்கு மட்டுமே. அதனைச் செய்து அகதிகளின் வாழ்வில் ஒளியேற்றுங்களேன்.

ஜனநாயகத் தளத்தில் பயணிக்கும் அமைப்புகள் தம்மளவில் ஊடகத்துடன் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்ற பண்பையும் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் ஊடகங்கள் மீது தெருச் சண்டைக்காரர்கள் போன்று மிரட்டும் நாட்டாண்மைத்தன்மையே தொடர்கிறார்கள்.

இங்கு எல்லா அமைப்புகளையும் கூறவில்லை என்பது அடிக்கோடிடப்பட வேண்டியது.

தங்களைப் பொறுப்பு மிக்க அமைப்பாக பிரகடனம் செய்துகொள்வதற்கு முன்னர் தங்களைத் தாங்களே இந்த அமைப்பில் உள்ளோர் சுயபரிசோதனை செய்ய வேண்டும். ஊடகமொன்றில் வெளியாகும் ஆசிரியர் தலையங்கத்துக்கு அதை எழுதியவரின் பெயர் போடப்படுவதில்லை என்ற அடிப்படை விடயம் கூட தெரியாமல் இப்படி ஊடகங்கள் மீது பாய்வது சரியா? என்று ஒருகணம் அவர்கள் சிந்திக்கவேண்டும்.

சமூக அர்ப்பணிப்பு , கூட்டுபொறுப்போடு இயங்கும் ஒரு பத்திரிகையான எதிரொலி எப்போதும் மக்களின் குரலாகவே ஒலிக்கும் என்பதை உறுதி செய்கிறது. அதன் வழி கடந்த மார்ச் மாதம் வெளியான ஆசிரியர் கருத்து உறுதியானதும், உண்மையனதும் என்பதை மீளவும் சொல்லிநிற்கின்றோம்.

அத்துடன், மிரட்டல்களுக்கு எதிரொலி அடிபணியாது என்பதையும், இது குறித்த எந்தச் சட்டப்போராட்டத்துக்கும் எதிரொலி எப்போதும் தயார் என்பதையும் உறுதியோடு வெளிப்படுத்துகின்றோம். மடியில் கனமிருந்தால் தானே வழியில் பயமிருக்கும்? மக்களுக்கான ஊடகமான எமக்கு மக்களின் ஆதரவு இருக்கும்வரை இதுபோன்ற மிரட்டல்கள் என்ன செய்துவிடமுடியும்?

**ஆ-ர்**

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

குரல்:08 அதிர்வு: 93 பங்குனி 2025 தொ.பே:1800 960162

## சமூக சேவையாளர்களா..?

ஆஸ்திரேலியாவில் விருதுகளுக்கு பின்னால் ஓடும் எருதுகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. வீதிக்கொரு கட்சி போல புலம்பெயர் நாடுகளில் ஆளுக்கொரு அமைப்பு என்ற ரீதியில் ஓடிக்கொண்டிருக்கிறனர் ஆஸ்திரேலிய தேசத்து தமிழர்.

அமைப்புகளை உருவாக்கி, வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பது போல விருது வழங்கும் நிகழ்வுகளை நடத்தி – பத்துபேரை அழைத்து விருது கொடுத்து அவர்களை அமைப்புகளில் இணைய வைப்பது இதன் பின்னணியிலுள்ள யுக்திகளில் ஒன்றாகும்.

சில அமைப்புகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொடர்புகளை வைத்துக்கொண்டு, அவர்கள் ஊடாக விருதுகளை வழங்கி, ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றதை காணமுடிகின்றது.

ஆஸ்திரேலிய தினத்தின்போது அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் சமூக சேவையாளர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. இது தொடர்பான படங்கள் சமூக வலைத்தளங்களில் உலாவந்தன.

இவ்வாறு உலாவிய படங்களில் சமூக சேவையாளர்கள் எங்கே உள்ளனர் என்று கால கண்ணாடியை செருகிப்பார்த்த போது இரண்டொருபேர் தென்பட்டனர். இதனையடுத்து ஏனையோர் தொடர்பில் வினவியபோது திடுக்கிடும் தகவல் வெளியானது.

உக்ரைன் மற்றும் காசா போன்ற போர்பகுதிகளில் சிக்கித்தவித்தவர்களுக்கு இவர்கள் சமூக சேவை செய்தவர்களாம். அதனால் தான் அவர்களை ஆஸ்திரேலிய தேசத்தில் காண முடியவில்லையாம்.

அவரவர் தங்களது சொந்த நலன்களுக்காக அமைப்புகளை உருவாக்கி வைத்து கூத்துப்போடும், அமைப்புகளால் அவர்களுக்குள் விருதுகளை கொடுத்து மகிழ்வதை நாம் குறைகூற முடியாது. அது அவர்களுக்குரிய சுதந்திரம்.

ஆனால் ஆஸ்திரேலியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக விருது வழங்கி மகிழ வைக்க முற்படுவது தமிழர்கள் சார்ந்து செயற்படும் உன்னதமாக செயற்பாட்டளார்களை முடக்குவதற்கான முயற்சியாகவே கருதப்படுகின்றது.

தற்போது விருது என்பதன் அர்த்தம் பலருக்கு புரிவதே இல்லை. சமூகத்திற்கு சிறந்த செயற்பாட்டை செய்த ஒருவருக்கு வழங்கப்படுகின்ற உன்னதமான கௌரவமே விருதாகும். எனவே, விருது பெற தகுதியானவர்களா என அதனை வழங்குகின்ற– வாங்குகின்றவர்கள் தங்களுக்கு தானே சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

சமூக அமைப்புகள், ஒருவரை மேடையில் ஏற்றி கௌரவிக்கும் போது அது அந்த தனிமனிதனை மட்டும் சார்ந்தது அல்ல. அந்த மனிதனை அடுத்த தலைமுறைக்கு அடையாளம் காட்டுவதாகவே அமைகிறது. அவரைப்போலவே இந்த சமூகத்துக்காக தொண்டாற்ற வேண்டும் என்ற உணர்வு மக்களிடையே தோற்றம்பெற வேண்டும். ஆகவே விருதுக்கு தெரிவுசெய்யப்படுபவர் பொறுப்பு வாய்ந்தவராக இருக்க வேண்டும்.

சமகாலத்திலும் – எதிர்காலத்திலும் மக்களால் பேசப்பட வேண்டியவராக இருக்கவேண்டுமல்லவா..?

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களால் விருது வழங்கப்பட்டவர்களில், அகதிகளின் பணத்தை ஏப்பமிட்ட ஒருசிலரும் உள்ளனர் என்பது கசப்பான உண்மையாகும்.

இவர்கள்தான் தமிழர் தரப்பின் முன்மாதிரியானவர்கள் என பரிந்துரை செய்யும் தமிழ் அமைப்புகளின் தலைவர்களும் நிச்சயம் பொறுப்புடன் செயல்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் மோசடிக்கு துணைநின்றவர்களாகவே அவர்களையும் அடையாளப்படுத்த நேரிடும்.

முகபுத்தகங்களில் படங்களை பகிரும் போதும் தாம் இந்த சமூகத்துக்கு எவ்விதமான முன்மாதிரி திட்டங்களை செய்திருக்கிறோம் என்று தெரிவித்திருக்க வேண்டும்.

வாக்கு வேட்டையை மாத்திரம் குறிவைத்து செயல்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, விருது பெறுபவர் உண்மையான சமூக செயற்பாட்டாளரா என்பது தெரியாது.

சமூக செயற்பாட்டாளர்கள் என்ற ரீதியில் உங்களால் அடையளப்படுத்தப்படும் நபர்களால் நீங்கள் தமிழ் சமூகத்துக்கு தான் நேர்மையாக இல்லை. உங்களை நம்பும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காவது நேர்மையாக இருங்கள்..

# வாழ்நாள் சாதனையாளர் விருது பார்சல்!

வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்குபவது என்பது அன்றாட நிகழ்வாகிவிட்ட காலச் சூழ்நிலையில் , ஏறக்குறைய எல்லோரும் ,எல்லாவற்றுக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் சுடச்சுட அடித்து தந்துவிட்டு விளம்பரம் தேடும் இந்த வேளையில், எதிரொலி இதழும் வாழ்நாள் சாதனையாளர் விருது கொடுத்தே ஆக வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

ஆசிரியகுழுமத்தினர் ஒரு மாத காலமாக அயராது உழைத்து இந்த விருதுக்குத் தகுதியானவர்களை கண்டுபிடிப்பதில் மிக சிரமப்பட்டு போயினர். ஒருவழியாக அனைவரும் ஒட்டுமொத்தமாக மனநிறைவோடு பரிந்துரைத்த பிரபலங்களின் விபரம் பின்வருமாறு.

**அந்தோணி அல்பானிஸ்** - வாழ்நாள் சாதனை ( வரி விதிப்பு , புதைபடிவ எரிபொருள்



ஊக்குவிப்பு மற்றும் மக்களை பாதிக்கும் எல்லாத் துறைகளிலும் தொடர்ச்சியான சாதனைகள் புரிந்தமை )

**பீட்டர் டட்டன்** - வாழ்நாள் சாதனை. ( லிபரல் கட்சியினை குழிதோண்டிப் புதைத்து வீட்டுக்கு அனுப்பியது மற்றும் தொலைநோக்கு அணுமின் திட்டங்கள் )



**ஆடம் பண்ட்** - வாழ்நாள் சாதனை (பசுமைக் கட்சியின் முகம், தேர்தல் நேரத்தில் பல்வேறு முகமூடிகளை அணிந்தது, கட்சியின் பேரழிவிற்குத் தலைமை தங்கியமை)

**நரேந்திர மோடி** - வாழ்நாள் சாதனை (உலகம் சுற்றுதல் , பல்வேறு உடை அணிதல், மற்றும் எல்லா கோணங்களிலும் புகைப்படம் எடுத்தமை)



**ராகுல் காந்தி** - வாழ்நாள் சாதனை (எப்பொழுதும் இரண்டாமிடம் , தவறான நேரத்தில் சரியாகப் பேசுதல், சரியான நேரத்தில் தவறாகப் பேசுதல், எவ்வளவு முயன்றும் வெற்றி பெறாமல் போதல் போன்ற பல்வேறு துறை



களில் அளப்பரிய சாதனை)

**எம்.கே.ஸ்டாலின்** - (கட்சியின் நிரந்தர இளைஞர், தந்தைக்குப்பின் தனயன், எப்பொழுதும் ஊடகத்துறையினரை பிசியாக வைத்திருத்தல்)



**ரஜினிகாந்த்** - (திரையில் பஞ்ச் வசனங்களும், நிஜத்தில் எப்பொழுதும் எந்தப்பக்கமும் சாயும் பாபாவாக இருத்தல் , நிரந்தர கதாநாயகர் , உடல் தமிழ்நாடு, உயிர் கர்நாடகா மற்றும் மின்னல் வேகத்தில் கட்சி ஆரம்பித்து மின்னல் வேகத்தில் கலைத்தது என்று பற்பல)

**கமல்ஹாசன்** - (பல்வேறு வேடம் அணிதல் - நிஜ வாழ்க்கையிலும். மக்கள் நீதி மையம் - லெட்டர்பேட் கட்சி , தெளிவுற மொழிதல்)

**இளையராஜா** - (சிறந்த ஒப்பீட்டுக் கலைஞர், தெரியாத விடயங்களிலும் கருத்து சொல்லுதல், தன்னைப் பற்றி எந்த சர்ச்சையும் வரவில்லையென்றால் காப்பீட்டு சர்ச்சை வழக்கு தொடுத்தல் என்று பல)

**த்ரிஷா** - (40 வயதிற்கு மேற்பட்ட இளசுகளின் கனவுக்கன்னி , நாளைய முதல்வர் , வாடிய மாடுகளைக் கண்டபொழுதெல்லாம் நெஞ்சம் வாடியமை)



**விஜய்** - (தமிழகத்தின் நிரந்தர காமெடியன் - திரையில் மட்டுமல்ல அரசியலிலும் - தமிழக வெற்றுக் கழகம் நடத்தி -பெரிய கட்சிகளுக்கு கிச்சுகிச்சு மூட்டி வருதல் ,திரையில் மட்டுமல்ல மைக் எங்கு கிடைத்தாலும் பஞ்ச் வசனம் பேசுதல்)

இவர்களுக்கெல்லாம் விருது வழங்குவதற்கு எங்களிடம் பணமில்லை. யாராவது எங்களுக்கு விளம்பரதாரராக வந்து நிதி அளித்தால் இவர்களை எல்லாம் கூட்டி வந்து விருது வழங்கலாம் என்று நினைக்கிறோம். என்னப்பா இது ,இங்கே ஆஸ்திரேலியாவில் வாழும்



தமிழ் மக்கள் ஒருவரும் இல்லையே என்று நினைக்கவேண்டாம். அவர்களெல்லாரும் ஏற்கனவே பலமுறை வாழ்நாள் சாதனையாளர் விருது வாங்கிவிட்டனர். இன்னும் யாரெல்லாம் தங்கள் பெயர் விடுபட்டது என்று நினைத்து வருத்தப்பட வேண்டாம். உங்களுக்கென சுடச்சுட வாழ்நாள் சாதனை விருது எப்பொழுதும் தயாராகவே இருக்கிறது. “யாருப்பா அங்கே ஒரு வாழ்நாள் சாதனையாளர் விருது பார்சல்”

# SST SPICES & Things




**Indian | Sri lankan | South Asian**

Groceries & Take away

At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!




## 7 days

## 10 am to 8 pm

SST Spices & Things
Where quality meets community

**Location:**
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020

**Contact:**
03 9417 2517

**Email:**
sstspicesnthings@gmail.com


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# CEYLON EXPRESS

## MONEY TRANSFER

- Best Rates Guarantee
- Same Day Bank Transfer
- Responsible Customer Support
- Easy, Quick Internet Money Transfer



127, Walker st, Dandenong | CONTACT : OSMAN 0402 396 052

## இலவச பாலர் பள்ளி (Free Kinder): உங்களுடைய குழந்தையை 2026 ஆம் ஆண்டுக்குச் சேர்த்துக்கொள்ளுங்கள்.






விக்டோரியாவில் மூன்று மற்றும் நான்கு வயது குழந்தைகளுக்கு இலவச பாலர் பள்ளி கிடைக்கிறது. இது குடும்பங்களுக்கு ஆண்டுக்கு சராசரியாக ஒரு குழந்தைக்கு $2,400 சேமிக்கும்.

இரண்டு வருட இலவச பள்ளி உங்களுடைய குழந்தையின் முக்கிய திறன்களை வளர்க்க உதவும், இதனால் அவர்கள் பள்ளியிலும் வாழ்க்கையிலும் சிறப்பாகச் செயல்படுவார்கள்.

இலவச பாலர் பள்ளி அனைவருக்கும் ஏற்றது. உங்களுக்கு ஒரு சுகாதாரப் பராமரிப்பு அட்டை அல்லது ஆஸ்திரேலிய குடியுரிமை (அல்லது அது போன்ற) தேவையில்லை.

மேலும் தகவல்களை vic.gov.au/kinder/tamil இல் அறியவும்.

VICTORIA State Government | Department of Education | KINDERGARTEN Victorian Government Approved

Best Start Best Life

# முகமிழந்தவன்

● சபா.தயாபரன்

காலை வெயிலின் கடும் உஷ்ணம் முகத்தில் பளீரென்று ஓங்கி அறைந்தது. வெப்பத்தின் உச்சம். வியர்வையின் கச கசப்பு. உடம்பை மட்டுமல்ல தாடியையும் ஆக்கிரமித்து எரிச்சலை உண்டாக்கி இருந்தது. ஹரிக்கு சற்றும் பொருத்தமில்லாத காலநிலை.சற்று வெறுப்பையே ஏற்படுத்தி இருந்தது.

முகத்தில் முக்கால் பகுதியை மறைத்திருந்த பெரிய தாடியில் வெள்ளிக் கம்பிகளாய் நீண்ட வெள்ளை முடிகள் இடைக்கிடை தலையை நீட்டியபடி மினுங்கி நின்றன.மீதமிருந்த முகத்தின் பக்கத்தை கறுப்புக் கண்ணாடி மறைத்திருந்தது. சுருண்ட நீண்ட முடியை வாரி பின்னால் கொண்டை போல முடிந்து வைத்திருந்தான். காலில் ஒரு ரப்பர் செருப்பு .தோளில் ஒரு கறுத்த துணிப்பை.

ஒரு தேசாந்திரியின் கோலத்தில்தான் ஊருக்கு வந்து இறங்கியிருந்தான். வந்து இறங்கிய ஹரியை அந்த ஊரில் யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அவன் யாரென்று அறிந்து கொள்ள அங்குள்ளவர்களின் மனநிலையும் வாய்த்திருக்கவில்லை. பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த ஊர் மக்களின் இறுகிய முகங்கள் ,அவர்களின் நடமாற்றம் எதையோ தொலைத்து அதை மீண்டும் தேடி அலைவது போன்ற ஒரு அவசரநிலை அவர்களிடம் காணப்பட்டதாக உணர்ந்தான்.

இந்த பூமிப்பந்துக்கு ஒரு முகவரி தந்த மண்ணில் தான் ஒரு அந்நியன் போல நிற்பதை உணர்ந்தான். சோகம் நெஞ்சை நிறைத்தது.இது ஒரு கொடுமையான நிகழ்வு. இது தனக்கேற்பட்ட வேதனையா , வெட்கமா அல்லது பிரபஞ்சம் தனக்கு இழைத்த சாபக்கேட்டின் பிரதிபலிப்பா என்று ஊகித்தறியாத குழப்ப மனநிலையிலேயே ஹரி இருந்தான்.

அந்தத் தெரு சின்னதும் பெரியதுமான கடைகளால் நிரம்பியிருந்தது.உயர்ந்து வளர்ந்து அகன்ற கிளை பரப்பிய மரத்தடியின் கீழ் அழகான கச்சித அமைப்புடன் சிறிய கோயில். கோவில் மணி பலமாக அடித்தது. அந்த மரத்தில் கல கலவென்று தங்கள் மொழியில் சிரிப்பொலிகளை இழையோட விட்ட சிறிதும் பெரியதுமான அந்த பறவைகளிற்கு எந்த அதிர்வையும் மணிச்சத்தம் ஏற்படுத்தவில்லை. அவைகளின் கீச்சுக் கீச்சுடன் அவைகளின் பரிபாஷை தொடரவே செய்தது .இவன் இருக்கும் வாழும் வெளி நாட்டில் உள்ள கோயில்களுக்குரிய ஆடம்பரத் தன்மை இல்லாமல் சாதாரணமாக காட்சியளித்த அந்த கோவிலில் ஒரு தெய்வீகத்தன்மை ,ஒரு அமைதி ,அதன் இனிமையான சூழல் கோவிலில் குடி கொண்டிருந்ததை ரசித்தபடி கடை வீதியைத் தாண்டி நடந்தான்.

விடிந்தும் விடியாத ஒரு காலைப் பொழுதில் எங்கோ போகிறோம் என்று தெரியாத மனநிலையில் இதே தெருவில் இருந்து இறங்கி அம்மாவுடனும் மாமாவுடனும் அந்தப் பேருந்தில் ஏறிய போது அந்த பயணம் இத்தனை நாள் நீடித்திருக்கும் என்று அவன் நினைத்திருக்கவில்லை. பிறந்த மண்ணையே இப்படி அந்நியப்படுத்தி நிற்கும் இந்த அவல நிலையை பத்து வயதே ஆன அந்தச் சிறுவனால் ஆரூடம் கணிக்க அப்படி என்னதான்பக்குவம் அப்போது வந்து விட்டிருக்க முடியும்?

விட்டு விட்டு ஒரு சில நினைவுகள்,..அப்பாவை கடைசியாக சிறையில் முகத்தில் வெள்ளை நிற நீண்ட தாடி. ஒரு கசங்கிய வெள்ளைநிற உடுப்புடன்தான் சந்தித்திருந்தான். முகத்தில் கவலைகளின் ரேகைகள். கண்கள் மட்டும் ஒரு பிரகாசத்துடன்.... . அப்பா அம்மாவிடம் அந்த பார்வையாளர் நேரத்தை சிறிதும் வீணாக்காமல் நிறையக் கதைத்தார். என்ன கதைத்தார் என்பது இவனுக்கு தெரிந்திருக்கவில்லை. கடைசியாக கண்ணீருடன் அம்மா விடை பெற்ற போது அப்பா அந்த சிறைக்கம்பிகளினூடே இவன் தலையைத் தடவி “ நல்லா படிக்கணும் மகன்” என்று சொன்னது மட்டும் ஞாபகத்தில் இருந்தது. அப்பா கஷ்டப்பட்டே கையை உயர்த்தி இவன் தலையை வருடியதும் அப்போது அவர் முகம் வேதனையில் காணப்பட்டதும் இவனுக்கு நல்ல ஞாபகம்.




அன்றுதான் இவன் அப்பாவை உயிரோடு கடைசியாக கண்டிருந்ததான்.அதன் பிறகு அந்த மூடிய பெட்டிக்குள் உயிரற்ற பிணமாகத்தான் அப்பா வந்திருந்தார் . கடைசியாக முகத்தைப் பார்க்கக் கூட முடியவில்லை. பெட்டியைத் திறக்க கூடாது என்ற இராணுவத்தாரின் கட்டளை அது. அம்மா பெருங்குரலெடுத்து கத்தியபோது என்ன நடந்தது, நடை பெறுகிறது என்று அறியாமல் பேந்தப் பேந்த முழித்தபடி அம்மா பக்கத்தில் இவன் நின்றிருந்தான். அவன் அப்பா இனி இல்லை என்று மட்டும் அந்த பிஞ்சு மனதின் உள்ளுணர்வில் உணர்த்தியே இருந்திருந்தது. அப்பா போன பின்பு அம்மா முற்றிலுமாக உடைந்தே போனாள். அப்பாவின் புத்தக அலுமாரியைக் குடைந்து தேடிப் பிடித்து பல புத்தகங்களை அம்மா ஆத்திரத்துடன் தீயிட்டுக் கொளுத்திய போது நீண்ட தாடி வைத்திருந்த மற்றும் மொட்டைத் தலையுடன் குல்லாத் தாடி வைத்திருந்தவர்களின் அட்டைப் படத்துடன் கூடிய பல ஆங்கிலப் புத்தகங்களும் தீயில் எரிந்து சங்கமமாகிப் போயிருந்தன.

கொஞ்சக்காலமாகவே இவனுக்கு தான் பிறந்த ஊருக்கு போக வேணும் என்ற எண்ணம் வந்திருந்தது. தன்னை ஈன்ற மண்ணை ஒரு தரம் பார்த்து அந்த மண்ணோடு உறவாடி நேசித்து மகிழ வேண்டும் என்ற எண்ணம் எப்போதே மனசில் ஏற்பட்டிருந்தாலும் அதை நிறைவேற்றுவதற்குரிய சந்தர்ப்பம் ஒரு வாரத்திற்கு முந்தித்தான் ஏற்பட்டிருந்தது. ஹரி வேலை செய்யும் பன்னாட்டு நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்ள அவன் அழைக்கப்பட்டிருந்தான்.

இதை அறிந்த அம்மாவின் முகத்தில்தான் எத்தனை சந்தோசம். சந்தோஷத்தின் ரேகைகள் முகம் முழுக்க நிரம்பியபடி அம்மா சொன்னாள்

“ ஹரி நீ பிறந்த ஊரை ஒரு தரமாவது போய்ப் பார்த்து வரவேணும் என்பதே என் நீண்ட நாளைய விருப்பம். இந்தப் பயணம் உனக்கு வித்தியாசமான அனுபவத்தையும் சந்தோசத்தையும் நிச்சயம் கொடுக்கத்தான் போகிறது. உன்னோடு வந்து ஊரை அங்குள்ள சொந்த பந்தங்களை பார்க்கவேண்டும் என்ற ஆசை எனக்கும் உண்டு. அப்பாவின் அந்த மரணம் தந்த பேரிடி.ஒரு பத்து வயதுச் சிறுவனான உன்னை வைத்து எப்படி காலம் தள்ளப் போறன் எண்ட கவலை. வாழ்க்கையின் விரக்தியின் விளிம்புக்கே என் வாழ்க்கை சென்ற நிலை,..

“அம்மா ஏன் பழையதைக் கதைச்சுக் கொண்டு..”

“இல்ல ஹரி . இது ஒரு இள வயது விதவைத் தாயின் அடக்கி வைக்கப்பட்ட சோகம் ..எத்தகைய கொடுமையான வலி என்பது அனுபவித்தவர்களுக்கே புரியும் தெரியும். அதை உணர வேண்டிய வயது உனக்கு.தனித்து நட்டாற்றில் விடப்பட்ட ஒரு நிலை....அவர் இறந்த பிறகு அந்த சூழ்நிலையில அந்த இடமே வெறுத்துப் போச்சு...நீ போக வேண்டும் என்று சொன்னவுடன் எனக்கும் அந்த ஆசை வந்து விட்டது. ஆனால் என் உடம்பு ஒத்து வரவில்லை.அவரோடு வாழ்ந்த அந்த சந்தோசமான காலங்கள்...நீ பிறந்த போது அவர் அடைந்த சந்தோஷங்கள்.உன் எதிர் காலம் பற்றி அவர் கட்டி வைத்திருந்த மனக் கோட்டைகள்...எல்லாமே ஒரு நாளில் உடைந்து சிதறி..” அம்மா அழத் தொடங்கி விட்டாள்.

“அம்மா ரிலாக்ஸ்...” ஹரி தளும்பினான்.

இவைகள் ஹரியின் அம்மா ஏற்கனவே சொன்ன கதை தான். அம்மா ஒவ்வொரு முறையும் நினைவு படுத்தும் போது இப்படித்தான் கலங்குவாள்.

ஹரியின் அம்மாவுக்கு அந்த நாட்களில் அப்பாவைத் தேடி நிறைய ஆட்கள் வருவது பிடிக்கவில்லை. அதிகாலை அல்லது பின்னிரவு நேரங்களில்தான் பெரும்பாலும் அவர்கள் வருவார்கள். அப்பாவிடம் நிறைய நேரம் பேசிக்கொண்டு இருப்பது அம்மாவிற்கு சில சந்தேகங்களை எழுப்பி இருந்தாலும் வாய் விட்டு அப்பாவிடம் இது பற்றிக் கேட்கவில்லை என்று அம்மா பின்னாளில் இவனிடம் சொல்லி அழுதிருந்தாள். வந்தவர்களிடம் அப்பா நிறையப் பேசுவதாகவும் நிறைய நேரம் எடுக்கும் சமயங்களில் அவர்களுக்கு தேநீர் வைத்துக் கொடுப்பது மட்டுமே அவள் வேலையாக இருந்ததாகவும் கண்கள் கலங்கியபடி அம்மா சொல்வாள்.

அந்த நிலையில்தான் அப்பா ஒரு நாள் காணாமல் போயிருந்தாராம். (22ஆம் பக்கம் பார்க்க)

# முகமிழந்தவன்

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டநாள் தேடுதலுக்குப் பிறகே அப்பாவை அந்த சிறையில்தான் அம்மா சந்தித்திருந்தார்.

“ நீ வளர்ந்த இந்த நாட்டுக் கலாசாரம் வாழ்க்கை முறை உறவுகள் முக்கியமாக உனது கொச்சைத் தமிழ் அங்கேயுள் ளவையோடு ஒப்பீட்டு பார்க்கும் போது உனக்கு வித்தி யாசமான அனுபவங்களையே கொடுத்து நிற்கும்.எப்படியோ சமாளித்துக் கொள்.” என்று சொன்னபடி அம்மா சில தொடர்புகளைக் கொடுத்தாள்.

அம்மாவின் ஆங்கில உச்சரிப்பு மெதுவாகவும் மிகவும் தாழ்ந்த குரலிலும் இருக்கும்.

அம்மா சொன்ன விபரங்களை வைத்து கந்தையா மாஸ்டரின் வீட்டை ஊரில் கண்டு பிடிப்பது போதுமென்றாகி விட்டது.

கந்தையா மாஸ்டர் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். ஹரியை அடையாளம் காண முடியாமல் திகைத்து நின்றார்.

இவன் தன்னை இன்னார் என்று அடையாளப்படுத்திய போது இவனைக் கட்டிப் பிடித்து அழத் தொடங்கி விட்டார்.

“இப்பதானா சொந்தங்களைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. சொல்லாமல் கொள்ளாமல் வந்து நிற்கிறாய்.?.” அம்மாவின் அதே ஆங்கில உச்சரிப்பு.

”போன பிறகு கொஞ்சம் தொடர்புகள் இருந்தன. நாடு இருந்த நிலையில் எல்லாத் தொடர்புகளையும் எங்கள் பாதுகாப்புக்காக கட்டாயம் துண்டிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு.அவளும் பாவம் என்ன செய்வாள்... உன்ட அப்பாவின் திடீர் மரணம்...

அநியாயமான கொலை...எப்படி சந்தோசமாக இருந்தவள். அவள் இந்த சூழ்நிலையை வெறுத்துப் போய் அங்கு சேர்ந்ததே நிம்மதி.என்றாலும் அவளைப் பார்க்காமல் செத்துருவேன் என்ற ஏக்கம்தான்..”

கந்தையா மாஸ்டர் உடைந்தார். இவன் அம்மா மேல் அவர் வைத்திருந்த பாசம் நெகிழ்வை ஏற்படுத்தியது.

இவனைப் பற்றி ஹரியின் அம்மாவைப் பற்றி கேட்டார். பரஸ்பர விசாரிப்புகள்.

மெல்லிய ஒரு 70 அல்லது 75 வயதுள்ள பெண் வெளியே வந்தாள்.

”ஆரென்று தெரியுதா...?” என்று அந்தப் பெண்ணிடம் அவர் கேட்டார்.

“இல்லையே..”

“நம்ம சின்னவள் அதுதான் லண்டனில இருக்கிற பத்மாட மகன்”

“ நம்மட பத்மாவா?”

“ஒமென்றுறன்.”

இவன் எழும்பி நின்று வணக்கம் சொன்னான்.

“எவ்வளவு காலம் அந்த புள்ளயக் கண்டு. எப்படி மகன் அம்மா இருக்கிறா?”

“சுகமா இருக்கிறா”....கொச்சைத் தமிழ் பதிலாகியது.

சுக விசாரிப்புகள் தொடர்ந்தன.இவன் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு அயலிருப்போர் கூடத் தொடங்கினர். அவர்களின் அன்பில் திக்குமுக்காடிப் போனான் ஹரி.

“ இதுதான் தம்பி நம்ம கலாசாரம் பண்பாடு உறவு முறை. எவ்வளவு காலம் சென்றாலும் இந்த உறவு முறை உபசரிப்பு .....எல்லாம் லேசில் எம்மை விட்டுப் போகாது. இதுதான் எமக்குரிய அடையாளம் .முகவரியும் கூட.”

“உண்மைதான் அங்கிள்.இது எனக்கே வியப்பான விடயம். அங்கேயுள்ள சூழ்நிலைகளைப் பொறுத்தளவில் பக்கத்து வீட்டுக்காரன் எந்த ஊர் என்ன செய்கிறான் அவன் குடும்பம் என்ன என்பதே தெரியாத அன்னிய மனப்பான்மையில்தான் நாங்கள் வாழ்கிறோம்.சுற்றி வர இருக்கும் தடுப்பு வேலி களே சிறைகளாக ....எம் இருப்பை உறவுகள் அயலிருப்புகள் எல்லாவற்றையும் தொலைத்து தனிமையிலேயே வாழ்க்கை நகர்ந்தபடி..

ஆனால் இங்கே உள்ள நிலமைகள் அதற்கு எதிர்மாறாக இருக்கின்றன.எத்தனை வருசம் கழித்து வந்தாலும் அந்த பாசம் உபசரிப்பு எல்லாம் மெய்சிலிர்க்க வைக்கின்றன அங்கிள்.”

“இருக்கும் இடத்தை விட்டு எதையோ நோக்கி ஓடு கிறோம் மகன்.நீண்ட தூரம் ஓடிக்களைத்த பிறகே தெரிகிறது எதை நோக்கி ஓடி வந்தோமோ அது பூச்சியம் என்று. வசதி வாய்ப்புகள் மட்டுமே வாழ்க்கையாகி விடாது .

எவ்வளவோ இருந்தும் இல்லாத ஒன்று எம் உறவுகள் நேசிப்புகள் எமது மரபுகள் விழுமியங்கள்...”கந்தையா மாஸ்டர் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தார்.

இடையில் இருமியபடி அவர் தொடர்ந்தார்

“...ஆ.. பத்மாட விடயத்தில அவள் இந்த சூழ்நிலையை விட்டுப் போனதே நல்லம்.அவள்ர நிலைமையில அவள் எடுத்த முடிவு சரி. கடைசிக்காலத்தில அவளப் பார்ப்பனோ தெரியல்ல...என்னுடன் கூடப்பிறந்த ஒரே சீவன்..” கந்தையா மாஸ்டரின் குரல் மீண்டும் கம்மியது.

“அம்மாக்கும் இதே கவலை இருக்கு அங்கிள்”

“இருக்காதா பின்ன ...அது சரி நீ எத்தனநாள் நிற்பாய்.

“ கொழும்பில இருந்துதான் வந்தன். போக வேண்டும். அங்கே கொம்பனி மீற்றிங் இருக்கு”

“ இத்தனை நாள் கழித்து வந்திருக்கிறாய் ஒரு நாளாவது நின்று போ”

இவனால் மறுக்க முடியவில்லை.

“வா கொஞ்சம் ஊரைப் பார்க்கலாம்”.

இருவரும் தெருவில் இறங்கி நடந்தார்கள்.

வரும் வழி நெடுக காண்பவருக்கெல்லாம் இவனை அறி முகம் செய்து வைத்தார் கந்தையா மாஸ்டர்.அவர்களின் நல விசாரிப்புகள் அக்கறை இவனை சிலிர்க்க வைத்தது.

ஹரி வாழ்ந்த வீடு..பழைய நினைவுகள் விட்டு விட்டு வரத் தொடங்கின. வாசலில் ஒரு பெரிய கிளிச்சொண்டு மாமரம் நின்றிருந்தது.கிளைகள் நன்கு பரப்பி வீட்டின் கூரை மீதே படர்ந்திருக்கும். அதில் ஒரு ஊஞ்சல் கட்டி இருக்கும். பக்கத்து வீட்டு மங்களா ,ராணி ,சோமன் ,வினோ எல்லாம் ஊஞ்சலாட வருவார்கள். சோமனும் வினோவும்தான் ஊஞ்சல் பலகையில் இருபக்கமும் இருந்து உந்துவார்கள். இவன்தான் அதில் சின்னவன். வேகமாக உந்தும் போது இவன் பயத்தில் கத்துவான் . அம்மா வந்து சத்தம் போட ஊஞ்சலின் வேகம் குறையும். முன் வீட்டில் இருக்கும் நல்லையா அண்ணன்தான் இவனை ஸ்கூலுக்கு சைக்கிளில் கூட்டிச் செல்வார்.சைக்கிள் பாரில் இருந்து போவதால் பின்புறம் வலியெடுக்கும்.என்றாலும் சைக்கிளில் புதினம் பார்த்துப் போவது இவனுக்கு மிகவும் பிடிக்கும்.இடைக்கிடை இருந்து விட்டு ஹனிபாட கடையில வடை வாங்கிக் கொடுப்பார்.சுடச் சுட வடை நல்ல ருசியாக இருக்கும். இப்போதே வாயூறியது ஹரிக்கு.

“என்ன யோசிக்கிறாய்”. கந்தையா மாஸ்டர் தொடர்ந்தார் . “இந்த வீட்டை விற்க வேண்டாம் என்று பத்மாட்டச் சொல்லியும் அவள் கேட்கல்ல. அவர் வாழ்ந்து தொலைந்து போன வீடு அந்த அடையாளமே எனக்குத் தேவையில்ல என்று விடாப்பிடியாக நின்றாள்.” வீடு கைமாறிப் போன கவலை கந்தையா மாஸ்டருக்கு.

அவன் வீட்டுக்கு பக்கத்தில் பெர்னாண்டோ அங்கிளின் வேலியோரமாய் ஒரு பூவரசம் மரம் நின்றிருக்கும்.பூவரச மரத்து இலைகளை மடித்து குழல் போல் செய்து தலைப்பை மடித்து சின்னவன் ஊதுவான். பல சினிமாப்பாடல்கள் அவன் வாயில் கதறி வந்து விழும்.

“அங்கிள் பெர்னாண்டோ அங்கிள்..?”

“பிள்ளைகள் வெளிநாட்டில போய் செற்றில் ஆகிற்றாங்கள்..அவர் போன வருடம் காலமாகியதாக கேள்விப்பட்டன்.”

பூவரசம் மரம் இருந்த இடத்தை பெரிய மதில் ஒன்று ஆக்கிரமித்திருந்தது. அப்போது கிறவல் ரோட்டாக இருந்த ரோட்டில் குண்டு விளையாடும் போது எப்போதுமே சதாதான் வெல்லுவான்.ஆனால் இவன் தோத்த எல்லாக் குண்டுகளையும் இவனுக்கே கொடுத்து விடுவான் அப்படி ஒரு விருப்பம் சதாவுக்கு இவனில்.

சதா, மங்களா ,ராணி ,சோமன் ,வினோ எல்லாம் இப்போ எங்கே போய்த் தொலைந்தார்கள்?

ஹரியின் தாய் வீட்டு சொத்து அந்தத் தென்னந்தோப்பு . கடற்கரைக்குப் பக்கத்தில்தான் இருந்தது. நளினமாய் கிண்ண மரங்களைத்தடவியபடி அருகே வளர்ந்திருந்த தென்னை மரங்களின் வேரோடு உரசி சரசமாய்க் கதைகள் பல பேசி ஒளித்தோடும் தோணா.தேங்காய் ஆய மூத்தப்பாவுடன் போகும்போது அந்த தோணாவில் குஞ்சு மீன் என்று நினைத்து குஞ்சித் தவக்கைகளைப் பிடிப்பது ஞாபகம் வந்தது. தோணா வில் நடுவே கம்பீரமாய் வீற்றிருக்கும் அந்த கிண்ண மரத்தின் பழத்தை தண்ணிச்சோத்தில் தேங்காய்ப் பாலும் சீனியும் சேர்த்து அம்மா பிசைந்து தரும் அந்த சோறு அமிர்தமாய் இருக்கும்.இப்போது நினைத்தாலும் வாயூறும்.தோணா தென்னை மரங்கள் கிண்ண மரங்கள் எல்லாம் இருந்த சுவடே இல்லாமல் காணாமல் போயிருந்தன.

“என்ன யோசிக்கிறாய் இது சுனாமி தந்த பரிசு. இயற்கையை மீறி மனிதனால் எதுவும் செய்ய முடியாது என்ற பிரபஞ்ச விதி யின் கோட்பாடு.”

“சரியான கவலை அங்கிள். எல்லாமே மாறி விட்டது.”

“எல்லாம் மாறினாலும் எமது பண்பாடு விருந்தோம்பல் உறவு முறை மாறாமலிருப்பது பற்றி சந்தோசப்படு . அதுதான் எம் ஊருக்குரிய வரம்”

அந்த தெருவில் இருந்தது சிறிய தேநீர் கடை.

”குணம் ரெண்டு பிளேன் ரீ ”என்றார் அங்கிள்.

ஹரி எடுத்துக் குடித்தான்.ஒரு வித இஞ்சி கலந்த தேநீர். சின்னனில மாமியம்மாட்டப் போனால் தரும் தேநீரும் இதே ருசியாகத்தான் இருக்கும்.

“தம்பி ஆரு...”

கந்தையா மாஸ்டருக்குப் பக்கத்தில வந்து பவ்வியமாகக் கேட்டார் குணத்தார்.

“நம்மட பத்மாட மகன். இப்பதான் வந்திருக்கார்.”

“நம்மட பத்மாவா.... அந்த புள்ளய நினைச்சா கவலதான். அருமையான புள்ள.... அம்மா சுகமா தம்பி “இவன் தலையாட்டினான்.

அவர் விசாரிப்பில் இருந்த அக்கறையும் கவலையும் இவனுக்குள் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. எத்தனை நன்றியுள்ள மனிதர்கள் நம்மவர்கள்.எந்த நாட்டுக்குப் போனாலும் எத்தனை காலம் கழித்து வந்தாலும் இந்த உறவு முறை இன்னும் மாறாதுதான்.

கடற்கரைக் காற்று இதமாய் வீசியது உடம்புக்கு சுகமாக இருந்தது. சிலிப்பரை கையில் தூக்கியபடி மணலில் நடந்தான். கால் கூசியது என்றாலும் இதமாக இருந்தது.

“சுனாமிக்கு முன்பு இங்க வரையும் கடல் இருந்தது,இப்ப அங்கே தொலைவில்..இயற்கையைப் போலவே உறவுகளும் தொலைவில்...“பெருமூச்சுடன கந்தையா மாஸ்டர்.

கடற்கரையில் மீன் பிடிப் படகொன்று வந்திருந்தது.

“ஐயா என்ன இஞ்சாலப் பக்கம்?”

நம்ம மருமகப்புள்ள,வெளியில இருந்து கனநாளைக்குப் பிறகு வந்திருக்கிறார். சும்மா ஊரச் சுத்திக் காட்டுவம் எண்டு”

வந்திருந்தவர் வணக்கம் சொல்ல ,இவனும் வணக்கம் சொன்னான்.

“மீன் ஏதும் பிடிபட்டிருக்கா முஸ்தபா?”

“இருங்கய்யா,வாறன்”

துடிக்க துடிக்க இரண்டு,பெரிய,மீன்கள்,ஒரு பையில்,

“எவ்வளவு,முஸ்தபா?”

“போங்கய்யா...கனகாலத்திற்கு பிறகு வந்திருக்கிறீங்க. கூட தம்பியும் வந்திருக்கார். என்ட பிறசன்ட வீட்ட கொடுத்தனுப்பிறன் நீங்க போங்க.”

முஸ்தபா இவனுக்கு சலாம் சொல்லி விட்டு நகர்ந்தான்.

இவைகளை ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் ஹரி.

“இதுதான் எமது ஊருக்குரிய அடையாளம் நேசிப்பு. நேசிப்பு என்பதை விட என்பதை விட ஒருவிதமான உறவு முறை என்பதே பொருந்தும். காசைக் கொடுத்து அவனின் நேசிப்பை கொச்சைப்படுத்துவதை விட நான் காசில்லாமலே வாங்கிக் கொண்டு போவதே அவன் நட்புக்கும் எங்களுக்கிடையே இருக்கும் உறவு முறைக்கு நான் கொடுக்கும் அங்கீகாரம்.”

எத்தனை பெரிய விடயத்தை மூன்று வரியில் முடித்திருக்கிறார் இவர் ஆச்சரியத்தில் ஹரி.

அந்த சந்தில் திரும்பிய போது பெரிய மாதா கோயில் கண்ணில் பட்டது.

“இது விசேடமான கோயில். வணங்குகிறமோ இல்லையோ இங்கு வந்து போனாலே மனதிற்கு ஒரு புது சுகானுபவம்.மனது சங்கடப்படும் சமயங்களில் இங்கு வந்து அந்த மண்டபத்தில் இருந்து கண்ணை மூடியபடி அமைதி நிலையில் இருந்தால் அந்தக் காந்தக் கதிர்வீச்சுக்களினால் கிடைக்கும் உள்ளுணர்வுடன் கூடிய அமானுஷ்ய அனுபவம் சொல்லி மாளாது . அதை உணரும் போதே புரியும் மென்மையான புன்முறுவலோடு சொன்னார் கந்தையா மாஸ்டர்.

வீட்டிற்கு வந்த போது இருட்டி விட்டிருந்தது.

முஸ்தபாவின் மீனை விதம் விதமாக சமைத்திருந்தார் வீட்டுக்கார அன்ரி. நிலா வெளிச்சம். அன்ரி பொரித்துத் தந்த மீன் பியருக்கு தூக்கியது. கந்தையா மாஸ்டருக்கும் கொஞ்சம் ஏத்தம்.

“காரேறு கந்த வேலைக் கருத்துடனே,.. ”உச்சஸ்தாயியில் பெருங்குரலெடுத்துப் பாடத் தொடங்கினார். இடையில் நிறுத்தினார்

“ அந்த நாட்களில் திரெளபதை அம்மன் வனவாசத்திற்கு காவடிகள் வரும். பிள்ளையார் கோயிலில்ல முதுகிலே முள்ளுக்குத்தி காவடியைப் பிடித்து வரும் சாமி. ஹா ஹா என்று கத்த இந்த காவடிப்பாட்டைப் பாடி காவடிக் கயிற்றை இழுத்துப் பிடித்து வரும் போது ஏற்படும் அந்த அனுபவம் சொல்லி மாளாது .

கணீரென்ற குரல் கந்தையா மாஸ்டருக்கு. உச்சஸ்தாயியில் கூட பிசிறு தட்டாத குரல் வளம்.

எத்தனை அனுபவங்கள். உறவுகள். அற்புதமான மனிதர்கள்.இந்த சூழ்நிலையில் தனிக்காட்டு ராஜாவாக வலம் வரும் கந்தையா அங்கிள்.ஒரு வகையில் அவர்மீது பொறாமை கூட ஏற்பட்டது ஹரிக்கு. வாழ்வை நேசித்து வாழ்கிறார் அவர்.

தான் வாழும் உலகம்.தனிமை.ஒட்டுறவில்லாத உறவுகள். ஏதோ ஒரு தனிக்காட்டில் வாழ்ந்து வாழ்க்கையை தொலைத்துக் கொண்டு அர்த்தமில்லாமலே தான் வாழ்ந்து கொண்டிருப்பதான பிரமை. எத்தனை வசதிகள் இருந்தாலும் இந்த மண்ணும் மக்களும் குறுகிய நேரத்தில் தந்த நேசிப்புகளும் அத்தனை லேசில் மறந்துதான் விடுமா?எத்தனை அற்புதமான மனிதர்கள். அன்பான உறவுகளும் உபசரிப்பான பாங்கும்.அம்மா சொன்னது சரிதான். இது எனக்கொரு புது அனுபவம்.மறக்க முடியாத அனுபவம். இந்த வாழ்க்கைமுறையை நான் இழந்து கொண்டி ருக்கிறேனா....?ஒப்பீட்டளவில் இயந்திர வாழ்க்கையை விட்டு இயற்கையான இந்த வாழ்க்கை வியக்கத்தான் செய்கிறது.

வீட்டுக்கார அன்ரியின் சாப்பாட்டின் ருசி பியர் தந்த மயக்கம் ..கந்தையா அங்கிளின் அனுபவக் கதைகள் ...கட்டிலின் மேலே சுழலும் மின் விசிறியின் காற்று அம்மாவின் நினைவு இவைகளின் சூழல் தந்த அசதியினால் எப்போது தூங்கினான் என்றே ஹரிக்கு தெரியவில்லை.

■


ATOP IMPORTS
FLOORING
We Supply & Install all
Types of Flooring Products
Gloss Tiles
Matte Tiles
Carpets
Decking
Cladding
Vinyl
Hybrid Flooring
Solid Parquetry
Engineered Oak
Engineered Parquetry
0433071956
www.atopimports.au
U1/44 Princes Hwy, Eumemmerring VIC 3177

Transco™
CARGO

=




ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

- ONLINE TRACKING
- SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
- LIVE CHAT ON WEBSITE
- TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU